பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 11 வெள்ளிக்கிழமை (27-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:304

# நல்லூர் வீதியில் நேற்று திரண்டனர் மக்கள் திலீபனைத் துதித்து உணர்வுபூர்வ அஞ்சலி!

யாழ்ப்பாணம்,செப்.27

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நேற்று நல்லூர் வீதிகளில் திரண்டு தியாகி திலீபனை உணர்வுபூர்வமாகத் துதித்து அஞ்சலிசெலுத்தினர்.

ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த தியாகி திலீபனின் 15 ஆவது நினைவு தினமான நேற்று குடாநாடு எங்கும் அஞ்சலி நிகழ்வுகள் நடந்தன.

சுமார் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு குடாநாட்டில் திலீபனின் அஞ்சலி நிகழ்வுகள் பெருமெடுப்பில் நடைபெற்றிருப்பது இதுவே முதற்றடவையாகும்.

பிரதான நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்கு வீதியில - திலீபன் உண்ணாநோன்பிருந்த அதே இடத்தில் நடந்தது.

அங்கு அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான அலங்கார மேடையில் திலீபனின் பெரியளவிலான உருவப் படம் வைக்கப்பட்டு மலர்கள் மலை போல் குவிக்கப்பட்டிருந்தன.

பொதுமக்கள் தங்கியிருந்து உண்ணாவிரதம் அனுஷ்டிக்க வசதியாக பெரிய தகரப்பந்தல்கள் மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தன.

காலை 9 மணிக்கு நிகழ்வுகள் அங்கு ஆரம்பமாகின.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தேசியக் கொடியை ஏற்றினார். யாழ். - நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் பொது ஈகச்சுடரை ஏற்றி

(14 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் ஏழு படையினர் விடுதலைப் புலிகளால் கைது!

## வில்கம் விகாரை அருகே புதனன்று சம்பவம்

கொழும்பு,செப்ரெம்பர்27

**திருகோணமலை மாவட்டம் வில்கம் விகாரைப் பகுதியில் வைத்து ஏழு இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் நண்பகல் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.**

**சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஊடாக இவர்களை விடுவிக்கும் முயற்சிகளை அரசுத்தரப்பு எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.**

திருகோணமலையில் உள்ள 221 பிரிகேட் படையணியின் 'மங்கி பிரிட்ஜ்' முகாமைச் சேர்ந்த ஏழு இராணுவத்தினரே புதன்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

திருகோணமலை நகருக்கு வடக்கே, திருமலை - அநுராதபுரம்

(14 ஆம் பக்கம் பார்க்க)



தியாகி லெப்.கேணல் திலீபனின் 15 ஆவது நினைவு தினம் நேற்று குடாநாடு எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. நல்லூரில் திலீபனின் திருவுருவப் படம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் காட்சி.

*மேலும் செய்தியும் படங்களும் 2 ஆம், 3ஆம் பக்கங்களில்.*

# 7 பேரையும் விடுவிக்கும் முயற்சி நேற்றுப் பலன் தரவில்லை!

கொழும்பு,செப்.27

திருமலையில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட ஏழு படையினரும் நேற்று மாலை விடுவிக்கப்படுவர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்த்தன. ஆனால், விடுவிப்பு இடம்பெறாமல் போயிற்று.

இந்த ஏழு படையினரையும் விடுவிப்பது தொடர்பாக சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஊடாக அரசுத்தரப்பு முயற்சி மேற்கொண்டது.

ஏழு பேரும் கைது செய்யப்பட்ட இடத்துக்கு சுமார் ஐந்நூறு மீற்றர் தள்ளி ஓரிடத்தில் விடுவிக்கப்படுவோரைப் பொறுப்பேற்பதற்காக நேற்றுமாலை 5.15 மணிக்கு சமுகம் தரும்படி தாங்கள் கேட்கப்பட்டதாகப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்பது புலிகள் பயணம்

வவுனியா,செப்.27

விடுதலைப் புலிகளின் ஊனமுற்ற ஒன்பது போராளிகள் நேற்றுமுன்தினம் வன்னியிலிருந்து தரைவழியாக மட்டக்களப்பு சென்றனர்.

வவுனியா, ஓமந்தை இராணுவச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் கைதிகள் பரிமாற்றம் நாளை!

கொழும்பு,செப்.27

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தக் கைதிகளைப் பரிமாற்றம் செய்யும் நிகழ்வு வவுனியா ஓமந்தையில் அரசுக் கட்டுபாட்டுப் பகுதிக்கும் புலிகளின் கட்டுபாட்டுப் பகுதிக்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசத்தில் நாளை காலை நடைபெறும்.

புலிகள் தம்வசம் உள்ள 7 படையினரை விடுவிப்பர். அரசு தம் வசமுள்ள 11 பேரை ஓமந்தையில் வைத்து விடுவிக்கும் மற்றைய இருவர் கொழும்பில் வைத்து விடுவிக்கப்படுவர்.

நாளைய நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் உரைநிகழ்த்துவார். உள்துறை

(14 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு பலகோடி ரூபா செலவில் திட்டம்

## 'ஆர்.ஆர்.ஆர்' என்ற பெயரில் அமுலாக்க அரசு தீர்மானம்

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு ஆர்.ஆர்.ஆர் (Triple R) என்னும் பெயரிலான பாரிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதென அரசு தீர்மானித்திருக்கிறது. தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் காணப்பட்ட தீர்மானத்துக்கு ஏற்பவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

கோடிக்கணக்கான ரூபா செலவிடப்படவிருக்கும் இத்திட்டத்துக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, ஜப்பான், ஸ்கண்டிநேவிய நாடுகள் ஆகியவை உதவி வழங்க உறுதியளித்திருக்கின்றன.

'ட்ரிபிள் ஆர்' என்ற திட்டத்துக்குத் தேவையான மதிப்பீடுகளை எதிர் வரும் இரு வாரங்களில் தயாரித்து முடிப்பதெனவும் அரசு தீர்மானித்திருக்கிறது. இடம்பெயர்ந்துள்ள சுமார் 8 லட்சம் மக்களை மீளக்குடியமர்த்துவது, ஆறு மாதங்கள் வரை அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது, விவசாய, மீன்பிடித்தொழில் அபிவிருத்திக்கு உதவியளிப்பது என்பன இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின மேற்பார்வையில் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் இணைப்பாளராக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் கடமையாற்றுவார்.

# பாதுகாப்புச் செலவில் ரூபா 1,540 கோடி வெட்டு! அரச கடன்களுக்கான வட்டி ரூபா 13,000 கோடி!!

## அடுத்த ஆண்டு 'பட்ஜெட்' மதிப்பீடுகள் சமர்ப்பிப்பு

கொழும்பு,செப்.27

அடுத்த வருடத்துக்கான உத்தேச வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்கள் 5,100 கோடி ரூபாவிலிருந்து 3,560 கோடி ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தன - நிதியமைச்சர் சார்பில் - உத்தேச வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டைச் சமர்ப்பித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் கடந்த மூன்று அமர்வுகளுக்குச் சமுகமளிக்காத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நேற்றுமுன்தினம் கூட்டத்திற்கு வருகைதந்திருந்தார். ஆனாலும், சூடான விவாதங்கள் எதுவும் அந்தக் கூட்டத்தில் இடம்பெறவில்லை.

ஜனாதிபதியுடன் வழமையாக வாதம்புரியும் அமைச்சர் ராஜித சேனாரட்ன அமைச்சரவைக் கூட்டத்திற்கு வந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மதிப்பீட்டின் பிரகாரம் நாட்டின் அடுத்த வருடத்துக்கான மொத்தச் செலவீனம் 65 ஆயிரத்து 600 கோடிரூபாவாகும்.

நாட்டின் தேசிய வருமானம் மற்றும் வெளிநாட்டு உதவிகளால் 31

(14 ஆம் பக்கம் பார்க்க)

பெற்றோர்களே! *வடக்கு - கிழக்கில் போலியோ மறைந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது!* மறந்துவிடாதீர்கள்!!

Sow the Seeds of Love

*உங்கள் குழந்தையை போலியோ பீடிக்காமல் இருக்க நாளை (28-09-2002) சனிக்கிழமை தவறாது போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுங்கள்!*

PolioPlus

Rotary International

- யாழ்.ரோட்டரிக் கழகம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## 2ஆவது அரையிறுதிப் போட்டி இன்று ஆஸ்திரேலியா ~ இலங்கை மோதல்

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இலங்கை ஆஸ்திரேலிய அணிகள இப்போட்டியில் மோதுகின்றன. ஆர். பிறேமதாஸ அரங்கில் பகல் - இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெறவுள்ளது.

எந்த அணி வெற்றிபெறும் என்று கணிப்பதற்கு கடினமானதொரு போட்டியாக இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான போட்டி விளங்குகிறது.

இரு அணிகளும் அண்மைக்காலத்தில் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்றுள்ளன. ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலிய அணி, நியூஸிலாந்து அணியை 164 ஓட்டங்களாலும் பங்களாதேஷ் அணியை 9 விக்கெட்டுக்களாலும் வென்றது.

இலங்கை அணி பாகிஸ்தானை 8 விக்கெட்டுக்களாலும் நெதர்லாந்து அணியை 130 ஓட்டங்களாலும் தோற்கடித்தது.

இன்றைய போட்டியில் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர்களும் இலங்கையின் முரளிதரன் முதலான சுழற் பந்துவீச்சாளர்களும் அதிக கவனத்துக்குரியவர்களாகவுள்ளனர்.

உள்ளூர் மைதானத்தில் விளையாடுவதால் இப் போட்டி இலங்கைக்கு அதிக சாதகமாக அமையும் என்று கருதப்படுகிறது.

இலங்கை அணி கடந்த மூன்று வருடங்களில் ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் 17 போட்டிகளில் பங்குபற்றியுள்ளது.

இவற்றில் 14 போட்டிகளில் இலங்கை வெற்றிபெற்றுள்ளது. இவற்றில் முரளிதரன் 38 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். சராசரியாக ஓவர் ஒன்றுக்கு 3.34 ஓட்டங்களையே முரளி கொடுத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் இடது கை துடுப்பாட்ட வீரர்களைக் கட்டுப்படுத்த முரளி சிரமப்படுவார் என்று விமர்சிக்கப்படுகிறது. எனினும் இக்கருத்தை முரளி நிராகரித்துள்ளார்.

ஆஸி.இடது கை துடுப்பாட்ட வீரர்களுக்குப் பந்து வீசுவது எனக்கு கடினமானதல்ல. பந்து அவர்களை விலகிச் செல்வதால் ஓட்டங்களைப் பெறுவதற்கு அவர்கள் சிரமப்படுவர். ஒருநாள் போட்டிகளில் இது சாதகமான விடயம். ரசிகர்கள் எமக்கு ஆதரவளிப்பர். ஆடுகளம் எமக்குச் சாதகமானது இவ்வாறு முரளிதரன் கூறியுள்ளார்.

இலங்கை அணியின் பயிற்றுநர் டேவ் வட்மோர் கருத்துத் தெரிவிக்கையில - முதல் 15 ஓவர்களில் ஒவ்வோர் அணியும் பெறும் ஓட்ட எண்ணிக்கை போட்டியின் வெற்றி - தோல்வியைத் தீர்மானிக்கும். என்று கூறியுள்ளார். (ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.27

ஊர்காவற்றுறை அண்ணா சனசமூக நிலையத்தின் ஆதரவில் அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணி முதல் அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:-

★ தம்பாட்டி காந்திஜி வி.க. எதிர் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் வி.க.

★ புளியங்கூடல் மகாமாரி வி.க. எதிர் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் வி.க.

★ காரைநகர் சோலையரன் வி.க. எதிர் வேலணை ஐயனார் வி.க. (ஐ-ரி-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.27

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாசாலை அணிகளுக்கிடையே நடை பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிமுதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட பணிப்பாளர் கா.சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார். திருமதி செல்வராணி பாலசிங்கம் வெற்றியீட்டிய அணிகளுக்கான பரிசில்களை வழங்குவார்.

இன்றைய ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 14 வயதுப் பிரிவு

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

### 16 வயதுப் பிரிவு

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் மகாவித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம். (ஐ-ரி-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.27

நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30மணிமுதல் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 14 வயதுப் பிரிவு

★ யாழ்.இந்துக் கல்லூரி எதிர் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி.

### 16 வயதுப் பிரிவு

★ யாழ்.இந்துக் கல்லூரி எதிர் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி.

★ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் நல்லூர் நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

★ அரியாலை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் யாழ். இந்துக் கல்லூரி. (ஐ-ரி-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.27

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30மணிமுதல் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம்:-

### 16 வயதுப் பிரிவு

★ உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

★ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

★ உரும்பிராய் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

★ புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம். (ஐ-ரி-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விளையாட்டு அவை நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல 3.30மணிக்கு நடைபெறும் கால் இறுதிப்போட்டியில் வலிகாமம் கல்விவலய அணியும், மது வரித் திணைக்கள அணியும் பங்குபற்றுகின்றன.(ஐ-ரி)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.27

வடமராட்சி கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும்.அணிகளின் விவரம் வருமாறு:-

### நெல்லியடி ம.ம.வில்


★ 16 வயதுப் பிரிவு - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி எதிர் கலட்டி றோ.க.த. பாடசாலை.

★ 18 வயதுப் பிரிவு - கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை எதிர் வல்வை சிவகுரு வித்தியாலயம்.

### ஞானசாரியார் மைதானத்தில

★ 16 வயதுப் பிரிவு - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் ஞானசாரியார் கல்லூரி.

(13 ஆம் பக்கம் பார்க்க)



திலீபனின் அஞ்சலி நினைவையொட்டி கடைகள் மூடப்பட்டு யாழ். நகரப் பகுதி வெறிச்சோடிக் கிடந்த காட்சி.

# சுதந்திரக் கட்சிக்குள் குழப்பநிலை!

## நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுமா?

கொழும்பு,செப்.27

நாடாளுமன்றத்தில் அரசு சமர்ப்பித்துள்ள 19 ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் சுதந்திரக் கட்சிக்குள பெரும் குழப்பநிலையை தோற்றுவித்திருக்கிறது. இச் சட்டத்திருத்தத்தை ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்பது குறித்துத் தீர்மானிக்கமுடியாதவாறு கட்சி பிளவுபட்ட நிலையில் இருந்து வருகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவும் அவருக்கு நெருங்கிய சில தலைவர்களும் சட்டத்திருத்தத்தை முற்றாக எதிர்க்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றனர். இதை ஆட்சேபிக்கும் சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் சிலர் சட்டத்திருத்தத்தை ஆதரித்து வாக்களிக்கத் தயாராகியுள்ளனர். வேறுசிலர் சட்டத்திருத்தத்திற்கு சுதந்திரக்கட்சி திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று கோருகின்றனர்.

இந்த நிலையில் இம் மூன்று பிரிவினரும் தொடர்ந்து ஆலோசனைக் கூட்டங்களை நடத்திவருகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா, அரசின் சட்டத்திருத்தத்தைத் தோற்கடிப்பதற்கு அல்லது அதனைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து அடிக்கடி ஆராய்ந்து வருகிறார். சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதிமாளிகையில் தன்னைச் சந்தித்த பொ.ஐ.முன்னணி எம்.பிக்கள் சிலருடன் ஆலோசனை நடத்திய ஜனாதிபதி, நாடாளுமன்ற அமர்வை ஒக்ரோபரில் ஒத்திவைப்பது பற்றியும் பிரஸ்தாபித்தார் என்று கூறப்படுகிறது.

சட்டத்திருத்தத்தை ஆதரிக்க வேண்டும் என்று கூறும் சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் சிலர், ஓரிரு தினங்களுக்கு முன்னர் அவசரமாகக் கூடி, சட்டத்திருத்தத்தை எதிர்க்கும் ஜனாதிபதியின் தீர்மானம் குறித்து ஆராய்ந்திருக்கின்றனர்.

ஜனாதிபதியின் தீர்மானத்தைக் கண்டித்திருக்கும் இவர்கள், இத்தீர்மானத்தினால் கட்சி மீண்டும் பிளவுபடும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக் கூறியிருக்கின்றனர். சட்டத்திருத்தத்தை ஆதரிப்பதன் மூலமே கட்சி பிளவுபடுவதைத் தடுக்கலாம் என்பது அவர்களின் நிலைப்பாடாகும்.

நாடாளுமன்றக் கலைப்பு விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா, சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் 19 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு, சுதந்திரக் கட்சி திருத்தம் ஒன்றைச் சபையில் சமர்ப்பிக்க வேண்டு என்று சுதந்திரக் கட்சி தலைவர்களில் சிலர் இப்பொழுதும் விரும்புகின்றனர். (ஐ)

### குடாநாட்டில் தீவிரமடைந்துவரும்

# படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் சமாதானத்துக்குப் பெரும் அச்சுறுத்தல்!

## திலீபன் நினைவு நிகழ்வில் இளம்பரிதி

யாழ்ப்பாணம்,செப்.27

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதும், மக்கள் மீதும் போராளிகள் மீதும் கெடுபிடிகளை விதித்து வருவதும் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி

நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் நேற்று இடம்பெற்ற தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 15 ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் க.சிவராமலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சி.இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது:-

தனது மக்களின் வாழ்வு மேம்படவும், இறைமை மீட்டெடுக்கப்படவும் தன்வயிற்றில் பட்டினித் தீயை மூட்டியவன் தியாக தீபம் திலீபன். குடாநாட்டில் உள்ள மக்கள் முன் சென்று போராட்டத்தின் நிலைப்பாட்டையும், எதிர்கால நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியவன் திலீபன்.

இந்திய அமைதிப்படையினர் எமது மண்ணில் காலூன்றிய பின்னர் நடந்த விடயங்களையும், நடைபெறப்போகும் நிகழ்வுகளையும் முற்கூட்டியே தீர்க்க தரிசனமாகக் கூறியவன் இவன்.

இந்திய அரசின் முன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அஹிம்சா வழியில் அவன் உண்ணா நோன்பிருந்தான். அந்த நேரத்தில் சிறிதளவு நீராவது அருந்துமாறு பலர் அவனை வற்புறுத்தினர். எனினும், அவன் தனது இலட்சியத்தில் இருந்து பின்வாங்கவில்லை. தனது இலட்சியப் பயணத்துக்குக் குறுக்கே எவரையும் நிற்க வேண்டாம் எனக் கூறிய அவன், வரலாற்றுத் தவறுக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் - கேட்டுக் கொண்டான். இதன் மூலம் ஒவ்வொரு மக்களின் மனதிலும் அன்றே சுதந்திரத் தீயை திலீபன் வளர்த்திருந்தான்.

அன்று திலீபன் வளர்த்த சுதந்திரத்தீ இன்று மக்கள் மனதில் கொளுந்து விட்டெரிந்து கொண்டிருக்கிறது. இன்று இந்த இடத்தில் மக்களும், புலிகளும் ஒன்றான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைப் பார்க்கும்போது போராட்டம் எந்த அளவுக்கு வலுப்பெற்றுள்ளது என்பதை உணரமுடிகிறது. மக்கள் எழுச்சிபெற்று, போராட்டம் வலுப்பெறும்போது ஓர் இனம் சுதந்திரம் அடைவதை எவராலும் தடுக்க முடியாது.

மக்கள் சுதந்திரமாக வாழவும் தமது சொந்த மண்ணில் தாம் நினைத்ததை எவ்வித தடையுமின்றிச் செய்யவும், சுதந்திரமாகக் கல்வி கற்கவும் எவ்வித தடைகளும் இருக்கக் கூடாது என்பதையே திலீபன் விரும்பினான்.

அவனது கனவு நனவாகும் சூழல தற்பொழுது உருவாகிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அரச படையினரும் இதன்மூலம் போராட்டத்தின் நியாயத்தை அறிந்து கொள்வர் என்று நம்புகிறோம் - என்றார் அவர்.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சங்கீத நடனத்துறை விரிவுரையாளர் கே.சிதம்பரநாதன், மல்லாவி பாடசாலை அதிபர் திருமதி க.புஸ்பராஜா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். (எ-10-ரி-8)



# திலீபனைத் துதிக்க திரண்டுவந்த சனத்திரள்





நல்லூரில் நேற்று நடந்த தியாகி திலீபன் நினைவு தின நிகழ்வில் எடுக்கப் பட்ட படங்களின் தொகுப்பு.

படங்கள்: தேவராஜன், வசந்தன்.











# நல்வாழ்த்துக்கள்



யாழ்.மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை மாணவி
**செல்வி**
**அருள்ராஜன் தர்மிகா**
அவர்கள்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு இவரை பயிற்றுவித்த அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இவரை அப்பா, அம்மா, சித்திமார், சித்தப்பாமார், பெரியமாமா, சின்னமாமா, தம்பிமார், அண்ணாமார் அனைவரும் பல்கலையும்பெற்று, மேலும் சிறப்புற மருதடி விநாயகர் அருள்பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றார்கள்.

*தொலைபேசி லேன்,*
*மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.*
(8752)

தகவல்:
மகேஸ்வரி(அம்மம்மா)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## ஏசியன் கல்வி நிலையம்

மீசாலை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2002

சித்திபெற்றோர்:

| | | |
|---|---|---|
| 1. | உ.அபிரா | 134 |
| 2. | ச.குகப்பிரியா | 125 |
| 3. | ம.நிகிந்தன் | 125 |
| 4. | சி.ராகவன் | 124 |
| 5. | க.சஞ்சீவன் | 123 |
| 6. | ந.சுரேகா | 122 |
| 7. | கு.அனுஜன் | 121 |
| 8. | த.பிரதீபன் | 119 |
| 9. | வி.நவின்சன் | 119 |

சித்திக்கு அண்மித்தோர்:

| | | |
|---|---|---|
| 1. | இ.கேசவாணி | 117 |
| 2. | செ.மோகனதாஸ் | 116 |
| 3. | தே.சத்தியகௌரி | 116 |
| 4. | வி.செந்துஜா | 117 |
| 5. | அ.டிலக்ஸன் | 115 |

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்று உயர் புள்ளியைப் பெற்று பெருமையைச் சேர்த்த இம் மாணவர்களை மனமார வாழ்த்துவதுடன், இவர்கள் மேலும் கல்வியில் உயர்நிலை அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(8728)

# கச்சாய் அம்மன் ஆலயத்தில் திருட்டு

கொடிகாமம்,செப்.27

கச்சாய் கண்ணகை அம்மன் ஆலயத்தினுள் புகுந்து திருடர் கோஷ்டி ஒன்று அங்கிருந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆலயச் சொத்துக்களையும் 5 பவுண் தங்கச் சங்கிலியையும் திருடிச் சென்றுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மதில் பாய்ந்து ஆலயத்தின் உள்வீதிக்குள் நுழைந்த திருடர்கள் ஆலயத்தின் 2ஆம் மண்டபத்தின் ஓடுகளினைக் கழற்றிக்கொண்டு மூலஸ்தானக் கதவைத் திறந்து திருட்டினை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் மேற்படி ஆலயத்துக்கு அருகில் உள்ள நரசிங்க வைரவர் ஆலயத்திலும் அதே இரவு ஓடு பிரித்து திருடர் இறங்கியுள்ளனர். எனினும், பொருள்கள் ஏதும் திருட்டுப் போகவில்லை எனக் கூறப்படுகிறது.(எ-ரி)

# கைதடி, நாவற்குழி வயல்களில் மிதிவெடி அபாயம்!

தென்மராட்சி,செப்.27

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட கைதடி, நாவற்குழிப் பகுதி வயல்களில் பெருமளவு மிதிவெடிகளும், வெடிக்காத ஷெல்களும் காணப்படுவதாக வயல்களைப் பார்வையிடச் சென்ற நெற்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்

தென்மராட்சி கமநலச் சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நெல் வயல்களைப் பார்வையிடச் சென்றவேளையில் மிதிவெடிகள், ஷெல்கள் மீட்கப்படாத நிலையில் அங்கு காணப்படுவது இனங்காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மழைகாலம் அண்மித்து வருவதால் மிதிவெடிகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் - அவர்கள் கோரியுள்ளனர். (எ-117)


**COOL LAMINATING கவரிடுதல்**

குறைந்த செலவில் நினைவு மலர்களை, பல வர்ணப் படங்களை அச்சிட்டு கவர் Laminating செய்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

(8734)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
26 - 09 - 1918



இறப்பு
30 - 08 - 2002

## அமரர் கந்தையா இராசையா

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமானவரே!
உமது நினைவு எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

30.08.2002 அன்று கொழும்பில் சிவபதமடைந்த எமது அன்புக்குரிய குடும்பத்தலைவர் **கந்தையா இராசையா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.09.2002) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் 29.09.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொட்டாஞ்சேனையில் உள்ள கமலாமோடி ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடிவந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் வைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் ஏனைய விதமாகத் துக்கம் பகிர்ந்தவர்களுக்கும் வைத்தியசாலையில் அவர் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் மருத்துவ சிகிச்சை அளித்த வைத்தியர்களுக்கும் ஏனைய தர ஊழியர்களுக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*Dr.சிவதாஸ்,*
*99 4/4, 16ஆவது ஒழுங்கை,*
*கொட்டாஞ்சேனை,*
T.P.: 473801

(C/23964)

குடும்பத்தலைவர் சார்பாக:
இ.இரத்தினகோபாலு,
இலங்கை வங்கி,
திருநெல்வேலி.

# சேவைநலன் பாராட்டு

## நடுநிலை தவறா நல்லுபஅதிபர்

குறுநகை தவழும் செவ்வாய்
குறும்பிலா வார்த்தைப் பொன்வாய்
மறுவிலா செயல்கள் எல்லாம்
மாணவர் போற்றி ஏற்றும்
வடுவிலா கிரியை மாண்பால்
நல்லுப அதிபராக
நடுநிலை தவறா அன்பர்
ஆக்கினர் வாழி வாழி!

பரிமளம் என்ற பேரை
வைத்தனர் தந்தை தாயர்
தனிவளம் கல்வி என்றே
கொண்டது உந்தன் உள்ளம்
இனிவளம் இல்லை என்றே
ஏற்று நீ கல்வித் தொண்டே
மணிவளம் என்று கொண்டாய்
மங்கை நீ வாழி வாழி!

கடமையில் பற்று நல்ல
கருணையின் ஊற்று மேலாம்
உடமையாய் போதிக்கு மாற்றல்
உயரிய நெறியின் ஆழ்மை
தடைகளைத் தாண்டும் வன்மை
தளர்விலா மனத்தின் திண்மை
நடைதனில் மென்மை எங்கள்
நல்லுப அதிபர் மாண்பே!

எண்ணத்தை உணரு மாற்றல்
ஏவியே எதையும் செய்யா
தண்ணளி நிறைந்த உள்ளம்
தனக்கெனக் கொண்டஎங்கள்
பொன் உப அதிபர் ஓய்வு
பெறுகின்றார் எனினு மென்ன?
மண்உள நாட்க ளெல்லாம்
மகிழ்ந் திருப்பார் எம் நெஞ்சில்!

மாணவர் தமக்குதவும்
மாண்பினை என்ன வென்போம்
தானமாய் அவர்க்கு ஈந்த
தகு பொருள் கொஞ்சமோதான்!
வானமா மழைபோல் கொட்டும்
வளம் பெறு கல்வியோடு
மானமாய் வாழ மண்ணில்
மறு நெறி புகட்டும் அன்னை!

இருபத்து ஐந்து ஆண்டு
எம்முடன் இணைந்து தொண்டு
தருமத்தின் துணையாய் ஆற்றி
தனக் கென ஓரிடத்தை
உருவத்தால் எய்தி எம்மை
உயர்நிலை அடைய வைத்த
தருமத்தின் செல்வி கல்வி
கண்ணெனக் காண்பாள் வாழி!

அதிபர்: **திருமதி A.சிவஞானசுந்தரம்**
*B.A.Hons.(cey) Dip.inEd. S.L.P.S.I*

## சேவை விவரம்

| | | |
|---|---|---|
| 04.05.1964 | 31.12.1965 | மன்.எருக்கலம்பிட்டி ம.ம.வித்தியாலயம் |
| 01.01.1966 | 12.02.1966 | யா/வேலணை ம.ம.வித்தியாலயம் |
| 13.02.1966 | 31.12.1967 | பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை |
| 01.01.1968 | 14.02.1975 | யா/நடேஸ்வரக் கல்லூரி |
| 15.02.1975 | 24.04.1977 | யா/ஸ்ரீ கணேசா ம.வித்தியாலயம், நயினாதீவு |
| 25.04.1977 | 26.09.2002 | யா/இராமநாதன் கல்லூரி |



## திருமதி பரிமளம் பத்மநாதன்

(பிரதி அதிபர்)
(விசேட பயிற்சி - வர்த்தகம்)

## பூத்துக் குலுங்கிய பூமகளே!

நல்ல ஆசிரியராய்
நலன் நோம்பும் உப அதிபராய்
சிறந்ததோர் நிர்வாகியாய்
சீர் பெற்ற செம்மணியாய்

அன்புச் சகோதரியாய்
அரவணைக்குந் தாயாராய்
சின்னஞ் சிறிய வர்க்கும்
சிறந்த தோர் ஆலோசகராய்

புத்தம் புதியவற்றைப் புகுத்துகின்ற நிபுணராய்
கல்வியில் மட்டுமல்ல கலையிலும் வல்லவராய்
வித்தகராக விளையாட்டுங் கொண்டவராய்
பூத்துக் குலுங்கியவள் பூமகள் பரிமளமாம்

பரிமளத்தின் பக்குவத்தைப் பாராட்டிமுடியாது - இருந்தும் பார் புகழ வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரிச் சங்கம்
*யா/இராமநாதன் கல்லூரி.*

(சி-23947)

## நயினை தந்த நல்லாசிரியை

ஆசிரிய சேவையை அர்ப்பணிப்புடன் வழங்கி யா/இராமநாதன் கல்லூரியின் உப அதிபரான திருமதி பரிமளம் பத்மநாதன் அவர்கள் தனக்கென தனித்துவமான கற்பித்தல் செயற்பாடுடையவர். வர்த்தகக் கல்வியை ஊக்குவித்து உயர்தர வகுப்புகளை உருவாக்குவதில் அயராது உழைத்தவர். தனது கற்பித்தல் அனுபவங்களை சக ஆசிரியர்களுக்கும் பகிர்ந்து வழங்கி மாணவரது முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர். கல்லூரி அதிபர்களது பக்கத் துணையாக நின்று தமது சேவையைத் தொடர்ந்து சிறப்பாகச் செய்து வந்தமை ஒரு சிறப்பம்சமாகும்.

காலை, மாலை என்று பாராது கடமையைக் கண்ணெனப் போற்றி சேவை செய்யும் உப அதிபர் அவர்கள் உயர்ந்த உள்ளத் தெளிவுடன் பிறருடன் உரையாடி உவகைகொள்ளச் செய்பவர். உள்ளத்தாலும் உடலாலும் உவகையுடன் சேவைசெய்து இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் அவர் ஓய்வுகாலத்திலும் ஒப்பற்ற சேவைசெய்து உலகம் போற்ற வாழ வாழ்த்துகின்றேன்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
உடுவில்,
மருதனார்மடம், சுன்னாகம்.

அ.தற்பரானந்தன்
உடுவில் கோட்டக் கல்விப்
பணிப்பாளர்.

## செயற்றிறன் மிக்க உப அதிபர்

எமது கல்லூரியில் கால்நூற்றாண்டுக்கு மேலாகச் சேவையாற்றி தனது ஆளுமைச் சுவடுகளை ஆழப்பதித்துச் செல்லும் உப அதிபர் அவர்களைப் பாராட்டுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

இக்கல்லூரியில் எனது சக ஆசிரியையாகக் கடமையாற்றிய காலம் முதல் அவரை நன்கறிவேன். எளிமை, பொறுமை, அன்புடைமை, இன்சொல், பரோபகாரம், கடமையுணர்வு ஆகிய பண்புகள் நிறைந்தவர். கற்பித்தல், நிர்வாகம் ஆகியவற்றில் திறமை மிக்கவர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் அனைவரையும் அரவணைத்துக் கல்லூரி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். வர்த்தக, கணிதத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றிருப்பினும் பல்துறைத்திறனுடன் பணியாற்றியவர். சிறப்பாக மாணவிகள் விளையாட்டுத்துறையில் சாதனை படைக்கச் சளையாது உழைத்தவர். எமது பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து அதன் ஆக்கபூர்வச் செயற்பாடுகளுக்குத் துணை நின்றவர். செயற்கரிய சேவைகளாற்றி நிறைவாக இளைப்பாறும் பிரதி அதிபர் திருமதி ப.பத்மநாதன் அவர்கள் எதிர்கால வாழ்வில் பரிமளங்கமழ்ந்து நலமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி குகானந்தநாயகி அப்புத்துரை**
செயலாளர், பழைய மாணவர் சங்கம்.

## பெருமை காத்த உப அதிபர்

திருமதி பரிமளம் பத்மநாதன் உப அதிபர் அவர்கள் யா/இராமநாதன் கல்லூரியின் ஒரு பெருவளம். வர்த்தக பாடத்துறை ஆசிரியை என்பதால் பாடசாலை நிதிநிர்வாகம் முதல் அனைத்துச் செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி, ஓய்வுபெறுகின்றார்.

பெற்றார் என்ற வகையில் அவரது சேவையைப் பல கோணங்களில் பார்த்து இருக்கின்றேன். அதிபரின் நிர்வாகப் பணிக்கு முழுமையான ஒத்துழைப்பு, ஆசிரிய மாணவ நிர்வாகம், கல்வி அபிவிருத்தி, பாடசாலை வளம் பேணல், கிடைத்த வளங்களை சரியாகப் பயன்படுத்தல், வளம் தேடமுனைதல் அனைத்துமே அவரின் சிறப்புப் பணிகள்.

ஓய்வுபெற்றாலும் எங்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்ட ஒரு தாயாகத் தன்னைப் பாவனை பண்ணி பாடசாலை என்ற அரங்கில் தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்து உதவுவார் என்ற நம்பிக்கையுடன், ஓய்வுக்காலத்தில் கிடைக்கவேண்டிய அனைத்து சௌகரியங்களையும் பெற இறை பிரார்த்தனையுடன் நிறைவு செய்கிறேன்.

**சி.சிவராஜன்**
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/இராமநாதன் கல்லூரி

உதயன்

## பாதுகாப்புச் செலவினத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க வாய்ப்பு

அடுத்த வருடத்துக்கான உத்தேச வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவினம் சுமார் முப்பது சதவீதம் குறைக்கப்படுகின்றது.

5ஆயிரத்து நூறு கோடி ரூபாவிலிருந்து 3ஆயிரத்து 560 கோடி ரூபாவுக்குப் பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவுத்திட்ட மதிப்பீட்டு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

அதிலேயே மேற்படி விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த பத்து ஆண்டுகளாக நாட்டின் பாதுகாப்புச் செலவினம் வேகவேகமாக உயர்ந்துகொண்டு சென்றது. இப்போதுதான் அதில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு, விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொண்டுவரும் அமைதிக்கான சமாதான முயற்சிகளே பாதுகாப்புச் செலவினத்தைக் கணிசமான அளவு குறைக்க வழி செய்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் செலவிடப்படவேண்டிய நிதி, வளம் போன்றவற்றை இதுவரை காலமும் கொடூர யுத்தம் கபளீகரம் செய்துவந்தது.

இனப்பிரச்சினையால் எழுந்த இந்த யுத்தத்திற்கு நியாயமான தீர்வு ஒன்றைக்காணும் முயற்சிகளை அடைத்துவிட்டு, பேரினவாதப் போக்கில் முன்னைய அரசுகள் நடைபோட்டதே இத்தகைய இழி நிலைக்குக் காரணம்.

இந்த இனப் போரினால் நாட்டின் பொருளாதாரம் பெரு வீழ்ச்சி கண்டது. மீளமுடியாத கடன் சுமைக்குள் நாட்டை யுத்தம் தள்ளிவிட்டது.

ஆனால், இந்த யுத்தத்தின் மூல காரணங்களைக் கண்டுபிடித்து, அவற்றுக்கு சரியான தீர்வை நாடுவதற்கு பேரினவாத அரசுகள் முன்வரவில்லை.

மாறாக -

சேற்று நிலத்துள் வீழ்ந்தவன், வெளியில் வரும் முயற்சியாக சேற்றை மீண்டும் மீண்டும் அதிகம் அழுத்தி, அதன் காரணமாக அதற்குள் புதைந்து போவதுபோல -

மீளமுடியாத யுத்த சாகரத்துக்குள் நாட்டை மீண்டும் மீண்டும் மும்முரமாக ஆழ்த்தி முழு நாட்டின் எதிர்காலத்தையுமே நரகத்துக்குள் வீழ்த்தினர் முன்னைய ஆட்சியாளர்கள்.

அமைதி வாய்ப்புக்களை - சமரசத் தீர்வுகளுக்கான சந்தர்ப்பங்களை - பொறுப்பற்ற முறையில் பல தடவைகள் நிராகரித்ததன் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு சாவு மணி அடிக்க அவர்கள் முயன்றனர்.

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் நாட்டின் வளத்தை நாசப்படுத்திய முன்னைய ஆட்சியாளர்களின் குட்டு அம்பலமாகிவிட்டது. அவர்களின் தில்லுமுல்லு நின்று பிடிக்கவில்லை.

யுத்தம் நின்றுவிட்டது; சமாதானத் தளிர் துளிர்விடத்தொடங்கிவிட்டது.

ஆனால், யுத்தத்திற்காக முன்னைய அரசு கண்மூடிக்கொண்டு வாங்கிய வெளிநாட்டுக் கடன்களை மூச்சைப் பிடித்துக்கொண்டு அடைப்பதானாலும் இன்னும் ஆறு வருடங்கள் செல்லும். அதுவரை பொருளாதார மீட்சிக்கு வாய்ப்பேயில்லை என்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அரசுப் படைகள் பயன்படுத்தும் ஆயுதங்களை மட்டுமல்லாமல் அரசுப் படைகள் புலிகளிடம் பறிகொடுத்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததற்கான கடனுக்கும், அந்தக் கடனுக்கான வட்டிக்கும் கூட, இப்போதை அரசு இன்னும் பல வருடங்களுக்கு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா நிதியைச் செலுத்தவேண்டியிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

பொருளாதார இழி நிலையில் இருந்து ஓரளவுக்கேனும் நாட்டைக் காப்பாற்றும் கடைசிச் சந்தர்ப்பம் இப்போது கிட்டியிருக்கின்றது.

யுத்த முழக்கத்துக்கு விடைகொடுத்து -

பாதுகாப்பு என்ற பெயரில் நாட்டின் நிதியும், வளமும் சூறையாடப்படுவதைத் தடுத்து -

சுபீட்சமான - அனைவருக்கும் சுதந்திரமான - நல்ல சமூக அமைப்பை ஏற்படுத்த கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை சம்பந்தப்பட்ட தரப்புகள் பொதுநன்மை கருதி சரியாகப் பயன்படுத்தினால் நாட்டுக்கும், இனங்களுக்கும், மக்களுக்கும் நல்வாழ்வு கிட்டும்.

யுத்தத்தின் பெயரில் வீண் விரயமாகும் வளம் நாட்டையும், மக்களையும் செழுமைப்படுத்த உதவும்.

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் 'லைசென்ஸ்' வழங்கும் பணி!

## பரீட்சைத் திகதிகளை பெறப் பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.மாவட்டத்தில் மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் பணி மீண்டும் இடம்பெற உள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்மாவட்ட உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இந்தப் பணியை மேற்கொள்ள மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் நால்வர் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர் என்றும் - அவர் தெரிவித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பணி மேற்கொள்ளப்பட இருப்பதால், ஏற்கனவே சாரதி அனுமதிப்பத்திரம்பெற விண்ணப்பித்தவர்கள் யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் வாகனத் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகத்தில் இன்று முதல் தமக்கான பரீட்சைத் திகதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

அத்துடன், புதிதாக சாரதி அனுமதிப் பத்திரம்பெற விண்ணப்பிப்போரது விண்ணப்பங்கள் இன்று வெள்ளிக்கிழமைமுதல் கையேற்கப்படும் என்றும் -

அவ்வாறு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கும் பரீட்சைக்கான திகதி வழங்கப்படும் என்றும் -

மோட்டார் வாகனத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-9)

### கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டோருக்கு

## யாழ்.பல்கலை புதிய வகுப்புக்கள் நவ.15இற்குப் பின்னரே ஆரம்பம்!

### பதிவாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.27

கடந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிபெற்று, யாழ்.பல்கலைக்கழகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ள மாணவர்களுக்கான கல்விசார் நடவடிக்கைகள் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னரே ஆரம்பமாகும் என யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரலில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி யாழ்.பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களையும் ஒன்றாக இணைத்து கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வழிசெய்யும் வகையிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஏப்ரலில் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் வெட்டுப்புள்ளி விவரங்கள் வெளியாவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக, இரு ஆண்டு மாணவர்களையும் ஒன்றாக இணைந்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் கூறப்பட்டது. (ஒ-9)

### இங்கு தட்டுப்பாடு நிலவுவதால்

## வன்னியிலிருந்து விதைநெல் எடுத்துவர விவசாயிகள் முடிவு

சண்டிலிப்பாய்,செப்.27

யாழ்.மாவட்டத்தில் விதைநெல்லுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கு வன்னிப் பிரதேசத்திலிருந்து தேவையான விதைநெல்லைக் கொண்டுவந்து நெல்விதைப்பை மேற்கொள்வதற்கு விவசாயிகள் முயற்சி செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

காலபோக நெல் விதைப்பு ஆரம்பிக்கும் காலம் நெருங்கி வருவதால் நல்ல இன விதைநெல் இனங்களுக்கு குடாநாட்டில் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்.கமநலசேவைகள் திணைக்களம் முன்னர் அறிவித்தபடி விவசாயிகளுக்குத் தேவையான நல்ல இன விதைநெல்லை இங்குகொண்டுவந்து தரும் என்று எதிர்பார்த்திருந்த விவசாயிகள் கடைசி நேரத்தில் ஏமாற்றம் அடைந்துள்ளதாக விவசாயச் சம்மேளனங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு குறிப்பிட்ட இன விதைநெல்லை மட்டுமே திணைக்களம் தென்னிலங்கையிலிருந்து எடுத்துவந்துள்ளது என்றும்-

இந்த விதைநெல் இனம் தமக்கு திருப்தியளிக்கவில்லை என்றும் - விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதனால், வசதியுள்ள விவசாயிகள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து விதைநெல்லைக் கொள்வனவு செய்துகொண்டு வருவதற்காக அங்கு சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, தனிப்பட்ட வியாபாரிகளும் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று விதைநெல்லைக் கொள்வனவு செய்துகொண்டுவந்து இங்கு விற்பனை செய்துவருகின்றனர். ஆயினும், அவர்கள் அதிக விலையில் இந்த விதைநெல்லை விற்பதால் சிறு விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். (ஒ-135)

### அடுத்தமாதம் 12ஆம் திகதி நடைபெறும்

## யாழ்.பல்கலை பட்டமளிப்பில் 5 பேருக்கு கௌரவப் பட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ். பல்கலைக்கழகத்தின் 22ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஐந்து பேருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஐந்து அமர்வுகளில் 958 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

முதல் அமர்வில் 211 பேருக்கும், இரண்டாவது அமர்வில் 203 பேருக்கும், மூன்றாவது அமர்வில் 190 பேருக்கும், நான்காவது அமர்வில் 183 பேருக்கும், ஐந்தாவது அமர்வில் 171 பேருக்கும் பட்டங்கள் வழங்கப்படும்.

ஐந்தாவது அமர்வின்போது - யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களுக்கு கலைமாணி, விஞ்ஞானமாணி மற்றும் வர்த்தக நிர்வாகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும்.

அத்துடன் உடற்கல்வி டிப்ளோமா, மீன்பிடி டிப்ளோமா மற்றும் வெளிவாரியாக பட்டம்பெற்ற மாணவர்களின் பெயர்களும் அங்கு வாசிக்கப்படவுள்ளன.

இவ்விழாவில் 5 அறிஞர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகம் கௌரவப் பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளது. தென் கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பிரிவுப் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கத்துக்கு விஞ்ஞான கலாநிதி பட்டமும் -

காரைநகர் ஈழத்து சிதம்பரம் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ கே.வைத்தீஸ் வரக்குருக்களுக்கு தத்துவ கலாநிதிப் பட்டமும் -

பொதுநல சேவகர் ஏ.சபாரட்ணத்துக்கு கலை முதுமாணிப் பட்டமும் -

முன்னாள் கலைப்பீடாதிபதி என்.பாலகிருஷ்ணனுக்கு இலக்கிய கலாநிதிப் பட்டமும் -

டாக்டர் எஸ்.ராமச்சந்திரனுக்கு விஞ்ஞான கலாநிதிப் பட்டமும் - வழங்கப்படவுள்ளன.

இப்பட்டமளிப்பு விழா இவ்வருடத்தில் நடைபெறும் இரண்டாவது பட்டமளிப்பு விழா என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## பஸ் பயணத்தின்போது 'சில்லறை' பிரச்சினை

வலி.வடக்கு,செப்.27

வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடத்துநர்களில் சிலர் சில்லறைக்காசு இல்லையென்று கூறி ஒரு ரூபா, இரண்டு ரூபா மிகுதிச் சில்லறைப் பணத்தைத் தருவதில்லையென பஸ் பயணிகள் கூறுகின்றனர்.

பயணிகள் தொடர்சியாகக் கேட்டால் டிப்போவில் வந்து மிகுதிப் பணத்தைப் பெற்றுச்செல்லும்படியும் கூறப்படுகின்றதாம்.

இத்தகைய செயற்பாடு பரவலாக இடம்பெறுகின்றபோதிலும், தீவகம் செல்லும் பஸ்களில் இச் செயற்பாடு அதிகளவில் இடம்பெற்றுவருவதாகவும் தெரியவருகின்றது.

இதேநேரம், பஸ் பயணிகளுக்கு வழங்க சில்லறை இல்லையென்று கூறிவிட்டு சில கடைகளுக்கு தரகு அடிப்படையில் சில்லறைக் காசைக்கொடுத்து தாள் காசாக சில நடத்துநர்கள் மாற்றிக்கொள்வதை அவதானிக்க முடிவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்து எதிர்காலத்தில் இத்தகைய செயற்பாடு இடம்பெறாமல் தடைசெய்யவேண்டுமென பஸ் பிரயாணிகள் எதிர்பார்க் கின்றார்கள். (ஒ-86)

**நாளை**

புரட்டாதி 12
சனிக்கிழமை
(28.09.2002)
திதி : ஸப்தமி
வைகறை 5.50 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
காலை 7.18 வரை.
சுபநேரம் 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நோப்படி)

**உதய வாக்கு**

அடக்கத்தின் அடையாளம் அறிவு, அறிவின் அடையாளம் அமைதி. இதுவே மனித வாழ்வின் நியதி.

### வடக்கில் நாளை

## காணாமற் போனோர் சங்கங்கள் இணைந்து கூட்டாகப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,செப்.27

வடபகுதியில் அரசபடையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும், காணாமற்போன படையினரின் உறவினர் சங்கமும் இணைந்து வடபகுதியில் பொது வழிபாட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடவுள்ளனர். இதற்காக காணாமற்போன படையினரின் உறவினர்கள் சங்கத்தினர் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகிறது.

இந்த இரு சங்கங்களின் உறுப்பினர்களும் இணைந்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி ஆலயம், சாட்டி மாதா தேவாலயம் மற்றும் விகாரைகள் ஆகிய வழிபாட்டு இடங்களில் ஒன்றுகூடி காணாமற்போன தமது உறவுகள் தம்முடன் மீண்டும் இணையவேண்டுமெனப் பிரார்த்தனைகளில் ஈடுபடவுள்ளதாக அன்னையர் முன்னணி செயலாளர் தெரிவித்தார்.

இப்பிரார்த்தனையில் ஈடுபடவிரும்பும் பெண் உறுப்பினர்கள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் இடையில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் அன்னையர் முன்னணி செயலாளர் திருமதி கௌரி வேல்சாமியிடம் தமது பெயர்களைப் பதிவுசெய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர். பிரார்த்தனைக்குழுவில் 50 பெண்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# அரசியல்வாதிகள், அதிகாரிகள் இடையே ஊழல் மோசடிகளில் புரிந்துணர்வு!

**இந்த நாட்டில் சமீபகாலத்தில் இடம்பெற்றுள்ள மிகப்பெரிய ஊழலாக ஜனாதிபதிக்கான வாகனக்கொள்வனவு கருதப்படுகிறது. அரச நிதி ஒதுக்கீடு, பயன்பாடு ஆகியனவற்றுடன் முக்கியமான அரச அதிகாரிகளான திறைசேரிச் செயலாளரும், கணக்காய்வாளர்நாயகமும் தொடர்புகொண்டுள்ளனர். ஊழல்களில் ஈடுபடும் அரசியல்வாதிகளுக்குத் துணைபோவதில் இந்த இரு அதிகாரிகளும் இடம்பிடித்துள்ளனர். இவர்களே இப்படியெனில் - வேலியே பயிரை மேய்ந்ததால் இனி யார்தான் இந்நாட்டைக் காப்பாற்றப் போகிறார்கள்? "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனால் எழுதப்பட்டு அப்பத்திரிகையில் பிரசுரமான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

யுத்தமே இந்த நாடு எதிர்நோக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள போதிலும் அந்த யுத்தத்தால் வெற்றி பெறுவதால் மட்டுமே இந்த நாட்டுக்கு மீட்சி கிடைக்கும் எனக் கூறிவிட முடியாது. ஊழலும் விரயமும் இந்நாட்டில் புரையோடியிருக்கும் புற்றுநோயாகும். இவை மட்டும் இந்த நாட்டின் அழிவுக்குப் போதுமானவையாகும். பிரபாகரன் வலுவான - நோயற்ற - ஒரு நாட்டுடன் போராடவில்லை. உள்ளகரீதியாக உளுத்துப் போன ஒரு நாட்டுடனேயே போரிட்டார். யுத்தம் காரணமாக நாட்டின் அழிவு வேகம் பெற்றிருக்கக்கூடும். இருப்பினும், இந்நாட்டில் யுத்தம் இடம்பெற்றிருக்காவிடினும் நாடு அழியும் அளவிற்கு உள்ளகரீதியாக நாடு குப்பை மேடாகிவிட்டிருக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஊழலும் விரயமும் ஸ்ரீலங்காவுக்கு மாத்திரமானவை என நாம் கருதமுடியாது. இவை குறைந்தோ, கூடியோ ஏனைய நாடுகளிலும் உள்ளன. இருப்பினும், வேறு நாடுகளில் ஊழலும் விரயமும் காணப்பட்டாலும் இவற்றிற்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் அந்த நாடுகளில் நடை-


திறைசேரி செயலாளர் ஜி.பி.ஜயசுந்தர

முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், எமது நாட்டின் துர்ப்பாக்கியமோ என்னவோ இவற்றிற்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எனவே, தங்கு தடைகள் எவையுமின்றி ஊழலும் விரயமும் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

ஸ்ரீலங்காவில் அரசாங்க மட்டத்தில் இடம்பெறும் ஊழல்களும் விரயங்களும் மொத்தத்தில் 50 சதவீதத்திற்கு அதிகமாகும். அரசாங்க மட்டத்தில் பெரியளவில் இடம்பெறும் ஊழல் மற்றும் விரயம் ஆகியவற்றில் முக்கியமான பிரமுகர்களும் உயர் அதிகாரிகளும் அந்நியோன்யமாக- புரிந்துணர்வுடன் - ஒன்றிணைந்து செயற்படுகின்றனர்.

அரசாங்க மட்டத்தில் பெரியளவில் இடம்பெறும் ஊழல்கள் பலவற்றிற்கு உதாரணங்கள் இருப்பினும் ஜனாதிபதிக்கென அதி பாதுகாப்பு

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சம்பவமானது பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் தொடர்பாக ஆராய மிகப்பொருத்தமான உதாரணம் எனக் கருதமுடியும்.

2000ஆம் ஆண்டில் ஜனாதிபதியின் செயலாளர் பணிமனைக்கென வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு வரவு - செலவுத் திட்டத்தில 6கோடியே 30லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. அந்த ஆண்டு நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதியின் செயலகத்திற்காக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு 240 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதற்கென நாடாளுமன்றம் அனுமதித்த தொகையைப்போல் 37 மடங்கு நிதி இந்தக் கொள்வனவுகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

எந்தவொரு ஜனநாயக அரசியல் முறையிலும் பொதுநிதியை ஒதுக்குவது மற்றும் அனுமதிப்பது தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றங்களுக்கேயுள்ளது. வரவு - செலவுத் திட்டத்தில் ஏதாவது ஒரு தேவைக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானது அல்ல எனத் தோன்றும் சந்தர்ப்பங்களில் குறைநிரப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து தேவைப்படும் மேலதிக நிதியைப்பெறும் வாய்ப்புக்கள் உள்ளன. இருப்பினும், அனைத்து நிதி ஒதுக்கீடுகளுக்கும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் அத்தியாவசியமானதாகும்.

ஆனால், இந்த வாகனக் கொள்வனவிற்கென அனுமதிக்கப்பட்ட 6 கோடியே 30 லட்சத்திற்குப் பதிலாக 240 கோடி ரூபா நாடாளுமன்றத்தின் அங்கீகாரமின்றி செலவிடப்பட்டுள்ளது. இது பொதுமக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள மோசடி மாத்திரமன்றி அரசமைப்பின் அடிப்படை நிபந்தனைகளை மீறிய செயலும் ஆகும்.

திறைசேரியின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர் திறைசேரிச் செயலாளர் ஆவார். அரசாங்க அதிகாரிகள் அனைவரிடையேயும் மிக முக்கிய அதிகாரியாகக் கருதப்படுபவரும் திறைசேரியின் செயலாளரே. அரசமைப்பு விதிகளுக்குப் புறம்பான விதத்தில் இடம்பெற்ற இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கான அனுமதியை வழங்காதிருப்பதே திறைசேரிச செயலாளரின் முக்கிய பொறுப்பாக இருந்தபோதிலும் திறைசேரிச் செயலாளர் இந்தக் கொடுப்பனவின் போது அது குறித்து அக்கறை கொள்ளாது, நாட்டின் தலைவியுடன் சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் கூட்டுச் சேர்ந்து செயற்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

இந்தக் கொடுப்பனவுகளில் ஊழல் இடம்பெற்றுள்ளது என்பதைவிட பாரிய ஊழல் குழியே உருவாகிவிட்டது எனக் கூறலாம். புத்தம் புதிய குண்டு துளைக்காத 'பி.எம்.டபிள்யு' வாகனத்திற்காகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் கொள்வனவு செய்யப்பட்டதோ புதிய வாகனம் அல்ல. பதிலாக ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின்போது பயன்படுத்தப்பட்ட ,1998 இல் உற்பத்தி செய்யப்பட்ட பழைய வாகனமாகும். 'பி.எம்டபிள்யு' வாகனங்களை உற்பத்தி செய்யும் ஜேர்மனியில் இருந்து இந்த வாகனம் இறக்குமதி செய்யப்படவில்லை. பதிலாக கொங்கொங்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. வாகனம் கொள்வனவு செய்வதற்கான விநியோகக் கட்டளையும் நேரடியாக 'பி.எம்டபிள்யு' நிறுவனத்திற்கு அனுப்பப்படவில்லை. பதிலாக இடைத்தரகுகளை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அரசியல்வாதிகளில முக்கியமாகக் கருதப்படுபவர் ஜனாதிபதியாவார். அதேபோல அரச அதிகாரிகளில் முக்கியமாகக் கருதப்படுபவர் திறைசேரியின் செயலாளர். ஆனால், சர்ச்சைக்குரிய இந்தக் கொள்வனவில இந்த இருவரும் இணைந்து செயற்பட்டுள்ளமை மிகவும் முக்கியமான பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. அதாவது அரச மட்டத்தில் இடம்பெறும் ஊழல்களில் அதிகளவிலான பொறுப்புகள் அரச அதிகாரிகளுக்கு உள்ளனவா? அல்லது அரசியல்வாதிகளுக்கு உள்ளனவா? என்பதே அதுவாகும்.

நாட்டில் நிலவும் பொதுவான கருத்துப்படி அதிகமான பொறுப்பு அரசியல்வாதிகளினதாகும்; அரச அதிகாரிகளால் ஒன்றும் செய்யமுடியாதநிலை. அரச அதிகாரி, அரசியல்வாதிகளை அனுசரித்தே செயற்படவேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால், இந்தப் பொதுவான கருத்துத் தவறானதாகும். இங்கு அரசியல்வாதிகளைவிட அரச அதிகாரிகளே அதிக பொறுப்புடையவர்கள் ஆவார்கள்.

ஜனநாயக அரசியல் வழிமுறையில் அரசியல்வாதி என்பவர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இருப்பினும், அரசியல்வாதிகளது செயற்பாடுகள் தற்காலிகமானவை. மககள் அவர்களை ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்கே தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் மீண்டும் நியமனம் பெற வேண்டுமாயின் அவர்களை மீண்டும் மக்கள் தெரிவுசெய்யவேண்டும்.

ஆனால், அரச அதிகாரிகளின் நிலைமை இது அல்ல. அரச அதிகாரியின் நியமனம் நிரந்தரமானது. அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல. அரச சேவைக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் நிரந்தர சம்பள அடிப்படையில் அரச சேவைக்கு ஆள்சேர்க்கப்பட்டவர்



ஆவார். சட்டங்களின்படி அரச யந்திரத்தைச் செயற்படுத்தும் அரச ஊழியராவார்.

எந்த ஓர் அரசியல் முறையிலும் முதுகெலும்பாகச் செயற்படுபவர்கள் நிர்வாக சேவையைச் சேர்ந்த அந்த அதிகாரிகளேயாவர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளுடன அவர்கள் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும் என்பதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. ஆனால், அரசியல்வாதிகளின் கேலிக்கூத்துக்களுக்கெல்லாம் அதிகாரிகள் தாளம் போடவேண்டும் என்பது ஒத்துழைப்பு ஆகாது. அரசியல்வாதிகள் சட்டவிரோதமாகச் செயற்படுவதற்கு அதிகாரிகள் இடமளிக்கக்கூடாது.

அதிபாதுகாப்பு வாகனக் கொள்வனவில் இடம்பெற்றுள்ள சட்டவிதிகள் மீறல்களைக் கவனத்திற்கொண்டு திறைசேரிச் செயலாளர் அந்தக் கொள்வனவுக்கான நிதியை அனுமதிக்காதுவிட்டிருப்பின் அரசியல்வாதிக்கு பாரிய ஊழலை மேற்கொள்ளும் எண்ணம் இருந்திருப்பினும அதை செயல்வடிவில் மேற்கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும். திறைசேரிச் செயலாளர் இந்தச் சட்டவிரோதக் கொள்வனவில் கடும் போக்கை

## யுத்தம் என்பது இல்லாவிட்டாலும்கூட ஊழலால் நாடு உளுத்துப்போயிருக்கும்

அனுசரித்திருந்தால் ஒருவேளை 'G.E.C. ALSTHOM' கொடுப்பனவு தொடர்பாக முன்னாள் திறைசேரிச் செயலாளர் பி.சி.பெரேராவுக்கு நேர்ந்த கதி திறைசேரிச் செயலாளருக்கும் நேர்ந்திருக்கும். இதுவேறு விடயம். நாட்டிற்குப் பெருமளவிலான நட்டத்தை ஏற்படுத்தும் சட்டவிரோதக் கொள்வனவிற்கு இடமளிக்காது சட்டத்தின்படி அதிகாரி செயற்படும் வேளைகளில் அந்த அதிகாரி அரசியல்வாதிகளால் பழிவாங்கப்படும்போது அந்த அதிகாரிகளைப் பாதுகாக்க பல்வேறு மாற்றுவழிகள் உள்ளன. தேவையேற்படின் அந்த அதிகாரி தனது பாதுகாப்புக்காக நீதிமன்றத்தை நாடமுடியும். இருக்கும் இந்த மாற்றுவழி கடினமானதாக இருப்பினும் அந்த வழியை அனுசரிக்காது நாட்டிற்குப் பெருமளவிலான நட்டத்தை ஏற்படுத்தும் கொள்வனவிற்கு இடமளிக்கும் உரிமை அரச அதிகாரிக்கு இல்லை. அரச அதிகாரிகள் தங்கள் மட்டத்தில் 'ஏனோதானோ' போக்கைக் கடைப்பிடிப்பதாலேயே அரசியல்வாதிகள் எதுவிதத் தடங்கல்களுமின்றித் தவறிழைக்கிறார்கள். தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் காரணமாக சிலவேளை அதிகாரிகள் அவ்வாறு நடக்கக்கூடும். ஆனால், பல அதிகாரிகள் இவ்வாறு தவறாக நடப்பதற்குக் காரணம் உயிர் அச்சுறுத்தல் அல்ல. பதிலாக அரசியல்வாதிகளுடன் ஒத்துழைப்பதால் லாபம் பெறும் நோக்குடனேயே அவ்வாறு சட்டவிரோதமான செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

இது முன்னாள் திறைசேரிச் செயலாளரிடம் இருந்த பலவீனம் மாத்திரம் அல்ல. அரசசேவையிலுள்ள பல உயர் அதிகாரிகளிடமும் இந்தப பலவீனத்தைக் காணமுடிகிறது. இது அவர்களிடையே நிலவும் பொதுவான பலவீனமாகும்.

ஜனநாயக அரசியல் வழிமுறையில் அரச துறைகளில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக ஆராயும் முக்கிய பொறுப்பு கணக்காய்வாளர்நாயகத்திடம்(Auditor General) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் அரச அதிகாரிகளிடையே மிகவும் முக்கியமானவர்.

அரச நிறுவனங்களின் நாளாந்தச் செயற்பாடுகள் மாத்திரமன்றி அரச நிறுவனங்களைத் தனியார் துறையினருக்கு விற்கும்போது அதன் மூலம் மக்களுக்கு இழப்புகள் எதுவும் ஏற்படாதவிதத்தில் சட்டபூர்வமாக அது இடம்பெறுகிறதா என்பதை ஆராய்ந்தறியும் முக்கிய பொறுப்பும் கணக்காய்வாளர்நாயகத்தினதே ஆகும். இந்நிலையில், அவர் அரச உடைமைகளைப் பாதுகாக்கும் முக்கிய காவலராகக் கருதப்படுகிறார். ஆனால், கணக்காய்வாளர்நாயகம் அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் கறைபடிந்த கொள்கையினை அனுசரிப்பதைக் காண முடிகிறது.

ஜனாதிபதி நிதியமானது பெருமளவு மக்கள் நிதி நிறைந்துள்ள நிதியமாகும். இந்த நிதியம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் உள்ளதைக் காரணமாகக்கொண்டு அந்த நிதியம் தொடர்பான கணக்காய்வுகளை கணக்காய்வாளர்நாயகம் தான் மேற்கொள்ளாமல் பதிலாக ஜனாதிபதி விரும்பும் தனியார் கணக்காய்வு நிறுவனத்திடம் கையளிக்க இடமளித்துவிட்டு பார்த்துக்கொண்டிருக்கும் நிலையை அனுசரித்து வருகிறார். கணக்காய்வாளர்நாயகத்திற்குத் தனது பணிகளை உரியமுறையில் நிறைவேற்ற நிதியோ அல்லது ஆளணியோ போதாமல் இருக்கக்கூடும். ஆனால், அவர் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். மேலும் தன்னிடமுள்ள ஆளணியைப் பயன்படுத்தி தனது பணி எல்லைக்குள்வரும் அரச நிறுவனங்களில் மிகவும் முக்கியமான நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வுகளை மேற்கொள்ளும் கொள்கையினை அனுசரித்து நடந்திருக்கவேண்டும்.

அரச நிறுவனங்களைத் தனியார் துறைக்கு விற்கும்போதே ஒப்பீட்டு ரீதியில் ஊழல்கள் மலிந்து காணப்படுகின்றன. இருப்பினும், இந்த விடயத்தில் கணக்காய்வாளர்நாயகம் தலையிடுவதை அரசியல்வாதிகள் விரும்புவதில்லை. அரசியல்வாதிகளின் அந்த விருப்பத்திற்கு இடமளித்து கணக்காய்வாளர்நாயகம் ஒதுங்கிக் கொண்டார். இவற்றைவிட அரச நிறுவனம் ஒன்றின் சில பங்குகளை தனியார்துறைக்கு விற்று எஞ்சிய பங்குகளை அரச நிறுவனம் தொடர்ந்து வைத்திருக்கும் சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் சார்பில் அந்த நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஆராயும் பொறுப்பு கணக்காய்வாளர்நாயகத்திற்கு உள்ளது. ஆனாலும், கணக்காய்வாளர்நாயகத்தின் கண்காணிப்பின்றியே அந்தப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிறுவனங்களின் பணிகளில் இருந்து கணக்காய்வாளர்நாயகத்தை நீக்குவதற்கு அல்லது விடுவிப்பதற்கு சட்டமா அதிபர்(சரத்.என்.சில்வா சட்டமா அதிபராக இருந்தபோது) விசேட வியாக்கியானம் ஒன்றை வழங்கியுள்ளார். அதாவது, அரச நிறுவனம் ஒன்றின் பங்குகளில் ஒரு பகுதி தனியார் துறையினருக்கு விற்கப்பட்டு அரசிடமிருந்து பெற்ற பங்குகளுடன் புதிய நிறுவனம் ஒன்று உருவாக்கப்படும் வேளைகளில், அந்த நிறுவனத்தை அரச நிறுவனமாகக் கருத முடியாததால் அந்த நிறுவனத்தின் நடவடிக்கைகளில் தலையிடும் உரிமை கணக்காய்வாளர் நாயகத்திற்கு இல்லை என்பதே சட்டமா அதிபரின் வியாக்கியானம் ஆகும். சட்டமா அதிபரின் இந்த வியாக்கியானம் தவறானது என்பதைக் கணக்காய்வாளர் நாயகம் அறிந்திருந்தும் அவர் அது குறித்து அக்கறை எடுக்காமல் அந்த நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வு செய்வதைத் தவிர்க்கும் போக்கைக் கடைப்பிடித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் கடன்அட்டை கொடுக்கல் வாங்கல் தொடர்பாக லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான ஆணைக்குழுவின் வியாக்கியானமானது கணக்காய்வாளர் நாயகத்தை உரைத்துப் பார்க்கக் கிடைத்துள்ள முக்கியமான சந்தர்ப்பம் எனக் கருதமுடியும். அமைச்சர் ஒருவர் வெளிநாடு ஒன்றுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வேளையில் நிதியைப் பெறுவதற்கு பல்வேறு வழிவகைகள் உள்ளன. அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பாக அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து நிதி ஒதுக்கப்படுகிறது. அவவாறு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாதவேளையில் குறைநிரப்புப் பிரேரணையின்மூலம் மேலதிக நிதிக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளமுடியும். அதைவிடுத்து அந்த அமைச்சின்கீழ் செயற்படும் நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெறுவது சட்டவிரோதமானதாகும்.

இந்தச் சம்பவத்தில் அமைச்சர்


கணக்காய்வாளர் நாயகம் எஸ்.ஈ.மாயாதுன்னை

(மங்கள சமரவீர) அமைச்சுக்கென ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து நிதியைப் பெற்றதுடன், மேலதிக நிதியை அரசு அதிக பங்குகளைக் கொண்டுள்ள ரெலிகொம் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்டார். ரெலிகொம் நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன் அட்டையைப் பயன்படுத்திய முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர "ஓடல" நிறுவனத்திடமிருந்து உடைகளையும் மற்றொரு நிறுவனத்திடமிருந்து விஸ்கியையும் கொள்வனவு செய்துள்ளார். இருப்பினும், லஞசம் மற்றும் ஊழல் தொடர்பான ஆணைக்குழுவின் கூற்றுப்படி இவைகள் எதுவும் ஊழல்கள் அல்ல. அதேபோல சட்டவிரோதமானவையும் அல்ல. இது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைக்குத் தலைகீழான வியாக்கியானமாகும். இந்தவிடயம் தொடர்பான முக்கிய நபர் கணக்காய்வாளர்நாயகம் ஆவார்.

இந்த அடிப்படைத் தவறுகள் திறைசேரிச் செயலர் மற்றும் கணக்

**தமிழில்: கஜனி**

காய்வாளர்நாயகம் ஆகியோரின் விடயங்களில் மட்டும் இடம்பெறவில்லை. சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர், மத்திய வங்கி ஆளுநர், பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள், பொலீஸ்மா அதிபர், ராணுவத் தளபதி, அமைச்சுக்களின் செயலாளர்கள் போன்ற அரச பதவிகளிலும் இந்த அடிப்படைத் தவறுகள் நிலவுவதைக் காணலாம். இந்தப் பதவிகளை வகிப்போர் அரசியல்வாதிகளின அடியாள்களாகச் செயற்படுகிறார்களே தவிர, சுதந்திரமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை. இதுவே உள்நாட்டு விவகாரங்கள் நாற்றமெடுப்பதற்கு முக்கியமான காரணமாகும்.

அரசியல்வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் உயர் அதிகாரிகளும் அரசி

(07ஆம் பக்கம் பார்க்க)

## மின்னிணைப்பு வேலைகள்

தங்கள் வீடுகள் மற்றும் தொழிற்கூடங்களுக்கான மின்னிணைப்பு வேலைகள் (Single phase/three phase) சிறந்த முறையில் நியாயமான கட்டணங்களில் அனுபவம் வாய்ந்தவர்களால் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு:-

புனர்வாழ்வு நிலையம்,
தெல்லிப்பழை.
தொலைபேசி இல - 070 - 222209 (8737)


## அரசியல்....

(06ஆம்பக்கத் தொடர்ச்சி)

யல்வாதிகளும் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு - தண்டனை வழங்கப்பட்டு-சிறைக்கூடங்களுக்கு அனுப்பப்பட்டால் மாதத்திரமே இந்த நிலையையில் மாற்றம் ஏற்படவாய்ப்புண்டு. ஊழலுக்கு எதிராகச் சட்டத்தை செயற்படுத்தும் நிலைமை அன்றுதான் பிறக்கும். அரசியல்வாதிகளின் எடுபிடிகளாகச் செயற்படாத முதுகெலும்புள்ள அதிகாரிகளின் நிர்வாகம் அன்றுதான் ஆரம்பிக்கும்.

☆


## வன்னியில் நாளை ஆரம்பம்

2ஆம் லெப். மாலதி அவர்களின் 15ஆவது நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் நடத்தும்

# தேசிய மகளிர் மாநாடு

28, 29, 30-09-2002 சனி, ஞாயிறு, திங்கள்

ஆகிய தினங்களில கிளிநொச்சியில்
காலை 9மணிக்கு ஆரம்பமாகி இரவு
வரை தொடர்ந்து நடைபெறும்.
இம்மாநாட்டில்



*முதலாம் நாள் மன்னார் மாவட்டப் பெண்கள் பிரச்சினை பற்றியும்.*
*இரண்டாம் நாள் மட்டக்களப்பு, யாழ்ப்பாண, வவுனியா, மாவட்டப் பெண்கள் பிரச்சினை பற்றியும்*
*மூன்றாம் நாள் கிளிநொச்சி, திருமலை மாவட்டப் பெண்கள் பிரச்சினை பற்றியும் ஆய்வுகள் இடம்பெறும்.*

*உங்கள் வரவால் நாம் நிறைவடைவோம்.*
*"தாயகப் பெண்களின் சங்கமம்"*


# கிளைக்குழு தெரிவிற்கான அறிவித்தல்

## புங்குடுதீவு நயினாதீவு

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ/து) புங்குடுதீவு

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17ஆம் திகதி 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆந் திகதிய 1020/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இன் ஏற்பாடுகளுக்கமைய நயினார்தீவு புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை நடத்துவதற்கான மேற்படி விதிகளின் பிரிவு 6 இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணை பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி விதிகளின் பிரிவு 7 இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும் அதன் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து நியமித்துள்ளேன் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

தவிசாளராக என்னால் பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலரினால் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து, வாக்களிக்கும் உரிமை பெற்ற முழுஉறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிவித்தல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்வு காரணமாக அறிவித்தல்கள் கிடைக்காது போகும் உறுப்பினர்கள் இந்த அறிவித்தலை தங்களுக்கு தனித்தனி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொண்டு குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கு தவறாது சமுகமளிக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

உறுப்பினராகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்து வரும் ஒருபங்கின் முழுப் பெறுமதியான ரூபா 100/- ஐச் செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமைபெற்று முழுஉறுப்பினர் தகைமைபெற்ற உறுப்பினராகக் கருதப்படுவார்.

ஒவ்வொரு கிளைகளினதும் முழு உறுப்பினர், தகைமைபெற்ற உறுப்பினர் (வாக்காளர்) அட்டவணைகளை சங்கத் தலைமை அலுவலகத்திலும் பார்வையிடமுடியும்.

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஊரதீவு | வை.கைலைநாதன் | 2002.10.05 | மு.ப10 மணி | புங்/கமலாம்பிகை ம.வி. |
| 02 | மடத்துவெளி | ஐ.நாகேஸ்வரன் | " | " | " |
| 03 | மாவுதிடல் | T.N.ராஜா | " | " | " |
| 05 | தல்லைப்பற்று வடக்கு | சு.கணேசு | " | " | புங்/மகாவித்தியாலயம் |
| 06 | தல்லைப்பற்று தெற்கு | B.ஸ்ரீக்குமார் | " | " | " |
| 07 | மண்காடு | க.சின்னராசா | " | " | " |
| 09 | புங்குடுதீவு மத்தி | ஆ.நாகலிங்கம் | " | " | " |
| 10 | பெருங்காடு | இ.புவன்ராஜ் | " | " | " |
| 12 | பெருங்காடு தெற்கு | K.குமாரகுருலிங்கம் | " | " | " |
| 13 | குறிகாட்டுவான் | P.மோகன் | " | " | " |
| 14 | கணேசா | தா.கணபதிப்பிள்ளை | " | " | " |
| 15 | இறுப்பிட்டி | S.செல்வரத்தினம் | " | " | " |
| 16 | அரியநாயகன்புலம் | K.அருந்தவநாதன் | " | " | " |
| 19 | நயினாதீவு தெற்கு | க.குகதாசன் | " | " | நயி/கணேசா ம.வி. |
| 20 | நயினாதீவு வடக்கு | செ.செந்தூரன் | " | " | நயி/மகா வித்தியாலயம் |

புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் தயாரித்தனுப்பப்பட்ட வாக்காளர் இடாப்புக்கமைவாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் மேற்படி கூட்டம் அழைக்கப்படுகிறது.

க.இராஜரெட்ணம்
தலைவர்.

(C-23969)

செ.எ.செல்வவதனா
செயலாளர்.


கூரை அமைப்பில் புதிய அலை
## அன்டன் சுப்பர் ஷெல்ரா
குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுப்பர் ஷெல்ரா

அன்டன் சுப்பர் ஷெல்ரா பொருத்துவதற்கு ஏற்றவை!

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனிஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
518, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 ,பெக்ஸ்: 448554

Super Shelta
உங்களின் கூரைக்குப் பரிகாரம்

Access Graphics


## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மடியில் மலர்ந்தது
28 - 08 - 1972



சமரில் உதிர்ந்தது
27 - 09 - 1998

## கப்டன் நிருபா/வினி

### (மகாதேவன் தர்சினி)

*(ஓயாத அலைகள் - 2)*

*(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி - A/L 1991)*

பெற்றவரைப் போல் பிறந்த மண் நேசித்த
பொற்றாரகையே - வீர
சொர்க்கமடைந்த இந்நாளில் - உன்
சொக்கும் அழகும் துடிப்பும் எண்ணி
பெற்ற வயிறு தீயாய் கொளுந்து விட
வற்றாத கண்ணீரோடு நினைவு கூரும்:

*"லக்ஸ்மண வில்லா"*
*சந்தை வீதி, ஆவரங்கால், புத்தூர்.*

பப்பா, அம்மா,
தங்கை பிரசாந்தி.

(8721)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

### சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
13 - 10 - 1955



மறைவு
28 - 08 - 2002

## அமரர் பொன்னையா மிருகண்டர்

*(நகரசபை, சாவகச்சேரி)*

அன்பின் அணிகலமாய் அமைதியின் உறைவிடமாய்த்
திகழ்ந்த எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து, எமது துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தும் மற்றும் பல வகைகளில் தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் பல வகைகளில் உதவிகள் புரிந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (27.09.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

(8702) மனைவி: மி.மகேஸ்வரி குடும்பத்தினர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் (18பரப்பு) பயன்தரும் மரங்களுடன் சகல வசதிகளும் கொண்ட கல்வீடும் காணியும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (8674)

உடுவில், டச்சுவீதியில் உள்ள (உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில்) 5 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.சிவபாலன், 59, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.(8754)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய், ஞானவைரவர்- கரந்தன் வீதியில் 24 பரப்பு தோட்டக் காணி தனிக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி R.குணராசா, மே/பா ச.விவேகானந்தன், கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உரும்பிராய். (8714)

## யாத்திரை

யாத்திரை தென்னிந்திய, ஆந்திர, கர்நாடக, கேரள, விஜயவாடா முதலான 130இற்கும் மேற்பட்ட புண்ணிய, புராதன, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலய தரிசனங்களுக்குக் குறைந்த செலவில் அழைத்துச் செல்கின்றோம். விருப்பமுடையவர்கள் எம்மிடம் கேட்டறிந்து, ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளவும். மேலதிக விவரங்களுக்கு: T.ஸ்ரீரெங்கநாதன், தொலைபேசி: 077-680102. (சி-23919)

## மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் பணிபுரியும் மணமக்களுக்கு பட்டதாரி அல்லது A/L, O/L படித்த மணமக்கள் தேவை. ஜாதகம், போட்டோ என்பவற்றுடன் 30.09.2002இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும். N.கந்தையா, மூத்தவிநாயகர் கோயிலடி, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (8718)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப, சுவாதி 2ஆம் பாதம், 1966, செவ்வாய் தோஷம் (7) உள்ள மணப்பெண்ணுக்கு நல்ல பண்புள்ள மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1657 மே/பா உதயன். (8748)

## கோழி மருந்து விநியோகம்

Gampura, Raniket தடுப்பு மருந்துகள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலையும், CRD (சளி மருந்து) ஒவ்வொரு சனிக்கிழமை காலையும் விநியோகிக்கப்படும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8683)

## தவறி விட்டது

தியாகராஜா தவபாக்கியம் தேசிய அடையாள அட்டையும் (இல.466692418V), தியாகராஜா சிவாஜினி தேசிய அடையாள அட்டை (இல. 785924215V), விசேட அடையாள அட்டை என்பன வல்லிபுர ஆழ்வார் கோவில் தீர்த்தத் திருவிழாவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி மொடோன் முரளியிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8729)

# தனியார் மயமாக்கலை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

## பொ.ஐ.முன்னணி முஸ்தீபு

கொழும்பு,செப்.27

ஐதேமுன்னணி அரசு மேற்கொண்டு வரும் தனியார் மயமாக்கலை எதிர்த்து தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்த பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் மயப்படுத்தப்படவுள்ள துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களுடன் இணைந்து இந்தப் போராட்டங்களை நடத்தவுள்ளதாகப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றைத் தாம் நடத்தியுள்ளதாகவும்- மற்றுமொரு சுற்றுப்பேச்சுகளைத் தாம் நடத்தவுள்ளதாகவும் - அவர் தெரிவித்துள்ளார். (ஒ-12)

## மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.27

தீவக லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ முகாம் செயற்பாடுகளுக்கு உதவியாக யாழ்ப்பாணம் சிறிநிதியா நகை மாடத்தினர் 3ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை கழகத் தலைவர் ப.தேவநாயகத்திடம் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த மருத்துப் பொருள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலணையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் பயன்படுத்தப்பட்டதாக லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்தார்.(ம)

## காணி கொள்வனவு செய்ய ஏற்பாடு

சண்டிலிப்பாய் செப்.27

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை நிறுவுவதற்குப் பொருத்தமான காணியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்ட காலமாக தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் இப்பணிமனைக்கு நிரந்தர கட்டடம் நிறுவுவதற்கு காணிகிடைக்கும் பட்சத்தில் கட்டடம் அமைப்பதற்கான நிதியினை சுகாதார அமைச்சிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

காணியை விலை கொடுத்து கொள்வனவு செய்யமுடியாத நிலை இருப்பதாகவும் காணியை பொதுமக்கள் அன்பளிப்புச் செய்யும் பட்சத்தில் அதில் பணிமனையை நிறுவ முடியும் என்றும் நான்கு பரப்பு காணி இதற்கு தேவைப்படுவதாகவும் அண்மையில் நடைபெற்ற வலி. மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## ஓட்டுமடத்தில் மாடுகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்ப்பாணம், ஓட்டுமடம் கலைவாணி சனசமூகநிலையத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

மாடு வளர்ப்பவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.(ஒ-180)

## விற்பனைக்கு உண்டு

**நல்ல நிலையில் உள்ள லான்ட் மாஸ்ரர் எஞ்சின், 03 கி.வாட்ஸ் டைனமோ, றோனியோ, தட்டச்சு இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு.**

*தொடர்பு:* **ப.சிறி**
*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(8726)

## அஞ்ஞனந்தாழ்வு ஆரோக்கிய அன்னை ஆலயப் பெருவிழா 29.09.2002

### இறுதி வழிபாடுகள்

**28.09.2002** சனி மாலை 5 மணிக்கு நற்கருணை விழா
**29.09.2002** ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுப்பலியும், அன்னையின் சொரூபப் பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ஆரோக்கிய அன்னை ஆலயம்
- பங்குத்தந்தை.

அன்னை செய்த உபகாரங்களுக்காய் நன்றியுடன்
அ.சி.மரியரட்ணம் குடும்பம், கொட்டடி.
(8755)

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஐந்தாந்தர புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்

செல்வன்

### கணேசலிங்கம் உதயராஜ்

அவர்களையும், கற்பித்த ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களையும் மற்றும் அதிபர் அவர்களையும் நாம் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*79/2, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.* (C/23977) - பெற்றோர்கள்.

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. வெளிநோயாளர் பகுதி கட்டடத் திருத்த வேலை மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை. | எம்-9 | ரூபா 2000/= | ரூபா 250/= |
| 2. கோப்பாய் வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மாநாட்டு மண்டப கட்டட நிர்மாண வேலை | எம்-9 | ரூபா 4500/= | ரூபா 250/= |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*பிரதம பொறியியலாளர் அலுவலகம்,*
***கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),***
*கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

பிரதம பொறியியலாளர்
*யாழ்ப்பாணம்.*

(C/23974)

கணனி தொழில் நுட்பத்தோடு,விஞ்ஞான முறைப்படி,ஆய்வுகூடத்தில்



தரம் உறுதி செய்யப்பட்ட,

சமநிலை போசணைப்பதார்த்தகலவையானது

சி.ஐ.சி உரம் மட்டுமே



இலங்கையில் சர்வதேச தரம் 9001 ஐ. உறுதிப்படுத்திய ஒரே ஒரு உரம் இதுவே.

சி.ஐ.சி. பேட்டிலைசர் (பிறைவேற்) லிமிட்டெட்
205,டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

Telephone: 01-688200-2
Fax: 01-691909

CIC

# மாநில சுயாட்சிமுறை ஏற்படுவதற்கு சந்திரிகாவும் துணைபுரியவேண்டும்!

## இந்தியப் பத்திரிகை 'தினமணி' கூறுகிறது

சென்னை,செப்.27

இலங்கையில் கூட்டாட்சி முறை ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனைத்து அரசியல் சக்திகளும் இணங்கவேண்டும். அத்துடன் போதிய அதிகாரங்களைக் கொண்ட வட., தென் மாநிலம் ஆகியவற்றின் மத்திய கூட்டாட்சி ஆட்சிமுறைக்கு ஒரு புரட்சிகர மாற்றம் ஏற்படவேண்டும். அந்தச் சாதனையைப் பொறுத்தே தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அமையமுடியும்.

- இவ்வாறு அடித்துக் கூறியிருக்கிறது இந்தியப் பத்திரிகையான 'தினமணி'.

அதன் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தாய்லாந்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பூர்வாங்கப் பேச்சு சுமுகமாக நடைபெற்று முடிவுற்றதையொட்டி புதிய நம்பிக்கை தோன்றியுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் இந்தியா தொடர்பாக சந்திரிகா கடைப்பிடித்து வந்த அணுகுமுறைக்கு மாறாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பார்வை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஏனெனில்,பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமென கொழும்பு கருதுகிறது.

தாய்லாந்துப் பேச்சுக்களின் விளைவுகளுக்குக் கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் முக்கியத்துவம் அளிக்கின்றன. அதிலும், குறிப்பாகத் தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக பூரண மாநில சுயாட்சி உரிமையை ஏற்றுக்கொள்ளப் புலிகள் தயாராக இருப்பதாக அன்ரன் பாலசிங்கம் திட்டவட்டமாகக் கூறியிருப்பதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

புலிகளைப் பொறுத்தளவில் அவர்களுடைய நிலையைத் தெளிவுபடுத்திவிட்டார்கள். இப்பொழுது புலிகளின் பூரண மாநிலசுயாட்சி உரிமைக் கோரிக்கைக்கு - தெற்கு இலங்கையைச் சேர்ந்த சிங்கள சமூகத்தின் ஆதரவைத் திரட்டவேண்டிய பெரிய பொறுப்பு - ரணில் விக்கிரசிங்க அரசை மட்டுமே சார்ந்ததல்ல. அவருடைய முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி வட்டாரங்களும் - குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகாவின் கூட்டணியும் துணைபுரியவேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### 10 பிரதேச செயலர் பிரிவுகளில்

# பட்டினிக்கு எதிரான இயக்கத்தின் அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகள்

வலி.மேற்கு,செப்.27

யாழ்.மாவட்டத்திலுள்ள 10 பிரதேச செயலர் பிரிவுகளில் பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

ஏ-9 தரை வழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களே பயனாளிகளாகப் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினரால் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, சாவகச்சேரி, கோப்பாய், பருத்தித்துறை, தெல்லிப்பழை ஆகிய 10 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து 4 ஆயிரத்து நானூற்றி முப்பத்தியொரு (4431) குடும்பங்கள் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் 4 ஆயிரத்து 420 குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத பாவனைப் பொருள்களும் -

ஆயிரத்து 59 குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான மரக்கறி விதைகளும் -

461 விவசாயக் குடும்பங்களுக்கு விதை நெல்லும் -

792 குடும்பங்களுக்கு கட்டடப் பணி, மரவேலை, மீன்பிடி போன்ற தொழில்களை மேற்கொள்வதற்கான உபகரணங்களும் -

50 குடும்பங்களுக்குக் கோழிக் கூடுகளும் விநியோகிக்கப்படவுள்ளன.

பத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் 30 குடிதண்ணீர்க் கிணறுகளும், 40 விவசாயக் கிணறுகளும், 100 மலசலகூடங்களும் திருத்தியமைக்கப்படவுள்ளன. 46 புதிய மலசலகூடங்களும் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

மலசலகூடங்கள், குடிதண்ணீர்க் கிணறுகள், விவசாயக் கிணறுகள் ஆகியவை திருத்தியமைப்பதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் -

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் முதல்வாரத்தில் பொருள்கள் விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் - பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் இணைப்பாளர் தெரிவித்தார். (ஒ-175)

### ஐம்பது அரச தோட்டங்கள் இவ்வாண்டில் தனியார்மயம்

கொழும்பு,செப்.27

அரசுக்குச் சொந்தமான ஐம்பது தோட்டங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் தனியார்மயப்படுத்தப்படும் என்று தோட்டத் தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரி வித்திருக்கின்றார்.

தேயிலை, இறப்பர், தெங்கு பயிரிடப்பட்டிருக்கும் இத்தோட்டங்களை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் அரசாங்க தோட்டக் கூட்டுத்தாபனமும் நிர்வகித்து வருகின்றன.

முதலீட்டுச் சபையின் ஏற்பாட்டில் நீண்டகால குத்தகை அடிப்படையில் இத்தோட்டங்கள் தனியார் துறையினருக்கு வழங்கப்படும் என்றும் - அமைச்சர் கிரியெல்ல தெரிவித்தார். (எ)

# மாத்தறை சிறைச்சாலையின் காவலர்கள் வேலைநிறுத்தம்

## சுற்றிவர பொலீஸ் பாதுகாப்பு

கொழும்பு,செப்.27

மாத்தறை சிறைச்சாலையின் சிறைக்காவலர்கள் 90பேர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனால் சிறைச்சாலைக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

சிறைச்சாலைக் காவலர்கள் ஆறு பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே, அவர்கள் இந்நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர். சுகவீன லீவில் அவர்கள் கடமையைப் பகிஷ்கரிக்கின்றனர்.

மாத்தறைப் பகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவம் தொடர்பாக பலப்பிட்டி நீதிமன்றத்தில் ஆஜரான 6 சிறைக் காவலர்கள் ஒக்ரோபர் முதலாந் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சிறைச்சாலையைச் சுற்றிவர பொலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும், தேவைப்பட்டால் இராணுவத்தின் சேவை பெறப்படும் என்றும் - மாத்தறை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்திருக்கிறார். (எ)

# ரூபா 1000, 500 கள்ளநோட்டுக்கள்! அவதானமாக இருக்க எச்சரிக்கை!!

கொழும்பு,செப்.27

ஆயிரம் ரூபா, 500 ரூபா கள்ள நோட்டுக்கள் நாட்டில் புழக்கத்தில் இருக்கின்றன என்று இரகசியப் பொலீஸார் எச்சரிக்கின்றனர். அதனால் கவனமாக இருக்குமாறு பொது மக்களை அவர்கள் கோரியுள்ளனர்.

சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான கள்ளநோட்டுக்கள் அச்சிடப்பட்டு புழக்கத்தில் விடப்பட்டிருக்கின்றன என்று கூறும் இரகசியப் பொலீஸார், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க விரிவான விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான 1000, 500 ரூபா கள்ளநோட்டுக்கள் பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பின்னர் அந்த நோட்டுக்கள் அழிக்கப்பட்டன.

நன்கு திட்டமிடப்பட்டு இந்த கள்ள நோட்டுக்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன என்றும் - 13 குழுக்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்றும் - பொலீஸார் தெரிவிக்கின்றனர். (எ)

# ஏழு ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு பூர்த்தி

அரசாங்க சேவை, பொலீஸ், தேர்தல் உட்பட ஏழு ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் என்று அரசமைப்புச் சபை தெரிவிக்கின்றது.

அடுத்த மாதம் 10ஆம் திகதி அரசமைப்புச் சபை கூடி நியமனங்கள் தொடர்பான சிபாரிசுகளை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனித உரிமைகள், லஞ்ச - ஊழல் தடுப்பு, நீதி, தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான ஆணைக்குழுக்களும் உறுப்பினர்கள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் சிபாரிசுகள் கிடைத்த பின்னர் ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# தன்னை அணுகியோருக்கே அருள் தருபவன் இறைவன்



கண்ணுக்குப் புலனாவது காட்சி. அது பார்வை எனப்படும். அக்காட்சி அகக்காட்சி, புறக்காட்சி என இரு வகைப்படும். அகக்காட்சி மனம் சம்பந்தமானது. புறக்காட்சி கண்பார்வையுடன் நேரடியாகவே தொடர்புடையது. கண்ணும் மனமும் பொருந்திக் காணும் காட்சியே உலகின் வியப்புமிகு காட்சிக்கு அழைத்துச் செல்லும். ஐம்புலனடக்கம் - மன ஒடுக்கம் என வியக்கச்செய்யும் அவ்வியப்பு, பரம்பொருள் என்னும் பேருண்மையைக் காட்டும்.

நாம் எமது அன்றாட வாழ்வில் பல பொருள்களைக் காண்கின்றோம்.

## ஞானக்கதிர்

சில பொருள்களைப் பார்த்ததும் சிந்தனை வயப்படுகின்றோம். சிலவற்றைக் கண்டும் சிரத்தை செய்யாது விட்டுச்செல்கின்றோம்.

ஒரு பொருளைப் பலர் பார்க்கும்போது பல விதங்களிலே, பல கோணங்களிலே சிந்தனை செய்கின்றனர். ஒரேபொருள் அவரவர் சிந்தனைக்கேற்ப வெவ்வேறு வகையாகக் காட்சியளிக்கும்.

ஒவ்வொருவரும் என்ன மன நிலையில் ஒரு பொருளை நோக்குகின்றனரோ அவ்வாறே அவரவர்களுக்கு அது காட்சியளிக்கின்றது.

அப்பர் சுவாமிகள் திருவையாற்றில் மூழ்கி எழுந்து வருகின்றார். அவர் கண்ட காட்சி:

"மாதர் பிறை கண்ணியானை..."

ஆணும் பெண்ணுமாக இரு யானைகள் வருகின்றன. அந்தக் களிறும் பிடியும் சிவமும் சக்தியுமாகக் காட்சியளிக்கின்றன. இவ்வாறு அப்பர் திருவையாறு கோயிலை நோக்கிச் செல்லும்போது, காணும் காட்சிகள் யாவும் அவருக்குச் சிவமும் சக்தியுமாகவே காட்சியளிக்கின்றன. அவர் பார்வையில் பரம்பொருளைத் தவிர வேறெதுவுமே தோன்றவில்லை.

"ஓடும் செம்பொன்னும் [illegible] நோக்கும்...." திருவுள்ளம் கொண்டவரன்றோ அவர்.

அதனையே திருமூலரும் -

*"மரத்தை மறைத்தது*
*மாமதயானை*
*மரத்துள் மறைந்தது*
*மாமதயானை*
*பரத்தை மறைத்தது*
*பார்முதற் பூதம்*
*பரத்துள் மறைந்தது*
*பார்முதற் பூதம்"*

- என்றார்.

மரத்தினால் செய்யப்பட்ட யானை ஒன்றைச் சாதாரண மனிதன் ஒருவன் காண்கின்றான். அப்பப்பா! எத்தகைய அழகு என்று யானையின் அழகில் - அதன் அமைப்பில் - வியக்கின்றான்; அதிசயிக்கின்றான். இங்கே யானை தோன்றியது மரம் மறைந்தது.

அதே யானையை ஒரு சிற்பாசாரியார் காண்கிறார். அவர் யானையின் எழிலை அதிசயிக்கவில்லை. அந்த யானை எவ்வாறு செய்யப்பட்டது; எந்த மரத்தினால் செய்யப்பட்டது என்றே சிந்திக்கின்றார். இங்கே மரத்துள் மறைந்தது மாமதயானை.

அதேபோல நாம் எமக்கு வழிகாட்டி நின்று எம்மை வழிநடத்திச் செல்கின்ற மேலான சக்தியைச் சிந்தித்து நோக்குவோமாயின் எம்மை உலகியல் வாழ்வில் அழுந்தச் செய்யும் மாயைத் தோற்றங்களை நீக்கி மேலான பரம்பொருளைக் காணலாம்.

இவற்றையே எம் ஆலய வழிபாடுகள் விளக்குகின்றன. ஆலயங்களும் நாம் சென்று எமக்கு மேலான சக்தியைச் சிவனாக - உமையாக - கந்தனாக - கணபதியாக - எண்ணி வழிபடும்பொழுது அப்பரம்பொருள் எமக்குக் காட்சியளிக்கின்றது. ஆனால், இதே சிலையைக் கல்லாகவும் மரமாகவும் நோக்குபவன் கண்களில் பரம்பொருள் காட்சியளிக்கமுடியுமா?

**கா.மணிமாரபன்**

"நலமிலன் நண்ணினார்க்கு
நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்"

இறைவன் தன்னை அணுகியவர்களுக்கே முத்தி இன்பத்தைக் கொடுப்பான். ஆகவே, நாம் நாள்தோறும் எமக்கு மேலாக நிற்கும் பரம்பொருளைச் சிந்தித்து நோக்கி வணங்குவோமாக.

★

# அம்மா வெளியேவர சுட்டுத் தள்ளினார்கள்; அதைப் பார்த்து அப்பா போக அவருக்கும் வெடி!

## 'மத்தியமுகாம்' கொலைகள் வழக்கில் வாலிபர் சாட்சியம்

காரைதீவு,செப்.27

'சம்பவதினம் நாம் வீட்டிலிருக்கும் போது சுமார் ஐம்பது பேர் சகட்டுமேனிக்குச் சுட்டுக்கொண்டு வந்தார்கள். வெளியே சென்று எட்டிப்பார்த்த அப்பாவையும், அம்மாவையும் என் கண் எதிரிலேயே துடிதுடிக்கச் சுட்டுக் கொன்றார்கள்'

- இவ்வாறு அம்பாறை மத்திய முகாம் படுகொலைகள் வழக்கில் சாட்சியமளித்த 4ஆம் கிராமத்தைச் சேர்ந்த குமாரசாமி ரவீந்திரன் (வயது 20) என்பவர் குறிப்பிட்டார்.

அடையாள அணிவகுப்பில் இனங்காணப்பட்ட மூன்று பொலீஸ் கான்ஸ்டபிள்களுக்கும் எதிரான வழக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் கே.தட்சணாமூர்த்தி முன்னிலையில் கடந்த திங்களன்று நடைபெற்றது.

பாதிக்கப்பட்டவர் சார்பில் சட்டத்தரணி எம்.கே.பேரின்பராஜா மன்றில் ஆஜராகியிருந்தார். பொலீஸார் தரப்பில் சட்டத்தரணி றக்கீம் ஆஜராகியிருந்தார்.

முதலாவது சாட்சியான குமாரசாமி ரவீந்திரன் மேலும் கூறியதாவது:-

24.09.1997 அன்று மாலை எமது கிராமத்தினுள் பரவலாக வெடிச்சத்தம் கேட்டது. நானும் அப்பாவும், அம்மாவும் வீட்டினுள் இருந்தோம். வரவர வெடிச்சத்தம் எமது வீட்டுப் பக்கமும் கேட்டது. பயந்துபோய் ஒளிந்து கொண்டிருந்தோம். வீட்டுப் படலையடியில் வெடிச்சத்தம் கேட்டது.

கதவை சற்று விலத்திவிட்டுப் பார்த்தபோது கட்டைக்காற்சட்டை அணிந்த சுமார் 50 பேர் சுட்டுக்கொண்டு வந்தார்கள். அப்போது எமது வளவுக்குள் வந்த ஒரு கோஷ்டியினர் 'வெளியில் வாடா' என்று கூக்குரலிட்டுக் கொண்டு வீட்டுக் கதவைக் காலால் உதைத்தனர்.

அம்மா வெளியேவர சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் அவர் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்தார். அதைப் பார்த்ததும் அப்பாவும் வெளியே சென்றார். அவருக்கும் வெடி விழுந்தது. இரத்த வெள்ளத்தில் அவரும் சாய்ந்தார்.

என்ன செய்வதென்றறியாது உயிரைக் கையில் பிடித்தவாறே வீட்டினுள் ஒளிந்து கொண்டிருந்தேன். சுவரோரமாக இருந்தபடியால் அவர்களால் என்னைக் கண்டுகொள்ள முடியவில்லை.

பின்பு, அம்மாவை கல்முனை வைத்தியசாலையில் பிணமாகக் கண்டேன். அவரது உயிர் வைத்தியசாலையிலேயே பிரிந்ததாகக் கூறப்பட்டது.

அப்பாவின் சடலம் அம்பாறை வைத்தியசாலையிலே இருந்தது. பின்பு அவர்களது சடலங்களைப் பொறுப்பேற்று நல்லடக்கம் செய்தோம்.

- இவ்வாறு சாட்சி கூறினார். இரண்டாவது சாட்சி எதிர்வரும் 07.10.2002இல் விசாரிக்கப்படுவாரென நீதிபதி அறிவித்தார். (எ)

### ஏ-9 வீதியில் வேகம் குறித்து கண்காணிப்பு

ஏ-9 வீதியில் வேகக்கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் வாகனங்களைக் கண்காணிக்க தமிழீழக் காவல்துறையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதையடுத்து பளை, ஆனையிறவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் காவற்றுறையினர் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-182)

### காரைநகரில் கடும் வரட்சி

காரைநகர் கிழக்குப் பகுதியில் உள்ள நீர் நிலைகள் மற்றும் கிணறுகளில் உள்ள நீர் வற்றிவிட்டதால் இப்பகுதியில் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீருக்கு மட்டுமன்றி ஏனைய தேவைகளிற்கும் நீரின்றி அவதிப்படுகின்றனர். அத்துடன் கால்நடைகளும் தண்ணீருக்காக அலைந்து திரிவதைக் காணமுடிகிறது. (ஒ-73)

# மக்கள் வங்கி உயர் அதிகாரி வன்னி விஜயம்

யாழ்ப்பாணம்,செப்.27

மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் டிறெக் ஜெ கெலி அடுத்த மாதம் 3ஆம் திகதி வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் இரண்டு நாள்கள் தங்கியிருக்கும் அவர், அங்குள்ள மக்கள் வங்கியின் பிரதேசக் கிளைகளுக்குச் சென்று வங்கி நடவடிக்கைகளைப் பார்வையிட உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

**ஆதிமூல லக்ஸ்மி நாராயண அமுதசுரபி** (கற்கோவள ஈசான மடம்)

தண்ணீர் தாங்கி கட்டட நிதிக்காக

**அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு விவரம்**

(C/23980)

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பரிசு | - இலக்கம் 3407 | ஆறுதல் பரிசுகள்10: | |
| 2ஆம் பரிசு | - இலக்கம் 0011 | 1) 2934 | 6) 2693 |
| 3ஆம் பரிசு | - இலக்கம் 1248 | 2) 0356 | 7) 3236 |
| அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட திகதி: 22.09.2002 | | 3) 2312 | 8) 1718 |
| | | 4) 3056 | 9) 0277 |
| | | 5) 3212 | 10) 0601 |

மேற்படி அதிர்ஷ்டசாலிகள் பரிசுப் பொருள்களை 29.09.2002 ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் பற்றுச் சீட்டுகள் காண்பித்து பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

வே.சிவனேஸ்வரன் - *தலைவர்* த.ஜெயக்குமார் - *செயலாளர்*

## யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

## பெருமையான வாழ்த்துக்கள்

5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2002

| | | | |
|---|---|---|---|
| 1. வி.தீபன்ராஜ் | - 162 | 7. ம.திவ்யாழினி | - 123 |
| 2. மா.வருணபாலன் | - 146 | 8. ச.ஸ்ரீசர்மிளா | - 123 |
| 3. க.மாலவன் | - 135 | 9. லோ.ஆரூரன் | - 123 |
| 4. இ.சாரதாதேவி | - 135 | 10. க.அபிராம் | - 122 |
| 5. த.கோகிலா | - 133 | 11. ச.பைந்தமிழ் | - 121 |
| 6. ர.ரஜீபன் | - 123 | 12. து.சுவஸ்திகா | - 119 |

சித்தியடைந்த மாணவர்களையும், சித்திப் புள்ளிக்கு அண்மித்த மாணவர்களையும், இவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கிய அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பா.அபி.சங்கம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

(8760)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

**யா/இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்**

**செல்வன் இ.அனோஜன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அப்பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*விநாயகர் பல்பொருள் வாணிபம்,*
*9, பழம் றோட்,*
*கந்தர்மடம்.*

(8756)

**ஐயா, அப்பா, அம்மா,**
**அங்கிள்மார், அத்தைமார்,**
**சித்தப்பாமார், சித்திமார்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22
-
06
-
1973



மறைவு
28
-
08
-
2002

## திருமதி ஜெயச்சந்திரன் இராஜவதனி

அன்போடும் பண்போடும் ஆண்டுகள்
சில வாழ்ந்த அன்பு உருவே!
நிறைவடையா வாழ்வில் தாயை அறியாத
பருவத்திலே பிள்ளைகளை விட்டுப்
பிரிந்தனையே! உன் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
கணவர், பிள்ளைகள், தாய், தந்தை, மாமி, சகோதரர்கள், மைத்துனர்கள்.

*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(8761)

## கராத்தே சங்கக்கூட்டம்

தமிழீழ விளையாட்டுத்துறையால் யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தில் பதிவுசெய்த, பதிவுசெய்யப்படாத அனைத்து கழக பிரதம ஆசிரியர்களுக்கும், கறுப்புப்பட்டி மாணவருக்குமான கூட்டம் நடைபெறவுள்ளது.

*இடம்* : Y.M.C.A. மண்டபம் *(கச்சேரி முன்பாக)*

*காலம்* : நாளை (28.09.2002) சனிக்கிழமை காலை 10.00 மணி.

கௌரவ செயலாளர்.

(8757)

# சுகாதாரப் பரிசோதகர் மூவர் நியமனம்

சண்டிலிப்பாய்,செப்.27

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூன்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியைப்பூர்த்தி செய்த எஸ்.திருநிறைச்செல்வன் இளவாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகராகவும் -

பண்டத்தரிப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகராக ஏ.எஸ்.லெஸ்லியும் -

நவாலி பொதுச்சுகாதாரப் பரிசோதகராக கே.யோகதீபனும் இம்மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை - பண்டத்தரிப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றி வந்த எஸ்.இராசதுரை ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். (எ-135)

# கொடிகாமத்தில் காலாவதியான உணவுப்பொருள்கள்

தென்மராட்சி,செப்.27

கொடிகாமம் நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் காலாவதியான உணவுப் பண்டங்கள் விற்னைக்கு வைக்கப்பட்டிருந்தமை சுகாதாரத் திணைக்களத்தினால் கண்டு பிடிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இப்பரிசோதனையில் ஈடுபட்ட வேளையில் காலாவதியான உணவுப் பண்டங்களைக் கைப்பற்றினர்.

காலாவதியான உணவுப் பண்டங்கள் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

# மாணவரிடையே நாடகப் போட்டி

வடமராட்சிகிழக்கு,செப்.27

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நாடகப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

"போரூட்" ஒளி நிறுவனத்தின் அனுசரணையுடன் போட்டி நடைபெறும்.

மேற்படி போட்டியில் முதலாமிடத்தைப்பெறும் நாடகத்துக்கு இரண்டாயிரம் ரூபாவும், இரண்டாவது இடத்தைப்பெறும் நாடகத்துக்கு ஆயிரத்து 500 ரூபாவும், மூன்றாமிடத்தைப் பெறும் நாடகத்திற்கு ஆயிரம் ரூபாவும் நான்காம், ஐந்தாம் இடங்களைப் பெறும் நாடகங்களுக்கு தலா ஐந்நூறு ரூபாவும் ரொக்கப் பணமாக வழங்கப்படவுள்ளன. (எ-182)


யாழ்.நகரில் பட்டப்படிப்பு கல்விக்கு தனித்துவமான விரிவுரையாளர் குழுவுடன்

**G.A.Q., B.A. Part I, B.A. Final - 2002**

தமிழ்: க.குர்பராஜா
இ.நாக.: கு.சத்தியதாசன்
புவியியல்: M.இக்னேசியஸ்

**G.A.Q. - 2003**
**A/L - 2004**
**2003 PAPER**

G.S பதவிக்கான போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்பு - 40 மணித்தியாலங்கள்

*பிரிவு III – சனி, ஞாயிறு 8–10* *IV – சனி, ஞாயிறு 12–2 மணி*

*புதிய பிரிவுகள் ஆரம்பம்: 28.09.2002 சனி காலை 8 மணி.*

**நியூட்டன் உயர்கல்வி நிறுவனம்**

*342, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.*

(8763)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் வெற்றிவேலு

அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வெற்றிவேலு 25.09.2002 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - செல்வம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சொர்ணம்மாவின் அனபுக் கணவரும் சாந்தலிங்கம், செல்வராணி, ஆனந்தலிங்கம், இராஜேஸ்வரி, கணேசலிங்கம், யோகேஸ்வரி, கனகரெத்தினம், மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாநதசிவரூபி, இராசலிங்கம் (S.R), ஜெயலெட்சுமி, சோதிலிங்கம், தவம், சிவானந்தன், பாசமலர், ராணி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் பரமலிங்கம், இராசலிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெ.சாந்தலிங்கம்,
வெ.ஆனந்தலிங்கம் (மக்கள்)

*3ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*

(8764)

## செல்லையா அருளானந்தம்

(முன்னாள போக்குவரத்து முகாமையாளர்-கல்லோயா அபிவிருத்திச்சபை)

வல்வெட்டி, பாமன்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா அருளானந்தம் நேற்றுமுன்தினம்(25.09.2002) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் பானுமதியின் அன்புக்கணவரும் அமிர்தராணி, மகேந்திரன் (பொறியியலாளர்-Botswana), செல்வராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பஞ்சரட்ணம் (முன்னாள் லங்கா சிமெந்து லிமிட்டட்), கிரிஜா (கணக்காளர்-Botswana), ஸ்ரீஸ்கந்தராஜா (புன்னாலைக்கட்டுவன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாத் (கனடா), விஜயாளன் (Botswana), வைஷ்ணவி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சேந்தன் (யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), நித்தியா, நிருபன், கரிகரன் (Botswana) ஆகியோரின் அன்புப் பேரனும் இராசையா (மலேசியா), காலஞ்சென்றவர்களான இராசம்மா குமாரசாமி, சதாசிவம் மற்றும் பொன்னையா (அட்வக்கேற்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பாமன்தோட்ட இல்லத்தில் இன்று (27.09.2002) வெள்ளிக்கிழமை மாலை3.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்வெட்டி எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பானுமதி அருளானந்தம் (மனைவி), பிள்ளைகள்.

*"பாமன் தோட்டம்"*
*வல்வெட்டி, வல்வெட்டித்துறை.*

(8762)

# கிளைக்குழுத் தெரிவிற்கான அறிவித்தல்

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), வேலணை.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17ஆம் திகதி 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் என்மீது பாலிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1920/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்"இன் ஏற்பாடுகளுக்கமைய வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை நடத்துவதற்காக மேற்படி விதிகளின் பிரிவு 6இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணை பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி விதிகளின் பிரிவு 7இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும் அதன் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து நியமித்துள்ளேன் என்பதனையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

தவிசாளராக என்னால் பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலரினால் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமை பெற்ற முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிவித்தல்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்வு காரணமாக அறிவித்தல்கள் கிடைக்காதுபோகும் உறுப்பினர்கள் இவ்வறிவித்தலை தங்களுக்குத் தனித்தனி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொண்டு, குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கு தவறாது சமுகமளிக்கும்படியும் கேட்டுக் கொள்கின்றேன்.

உறுப்பினராகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்தவரும் ஒரு பங்கின் முழுப் பெறுமதியான ரூபா 100/-ஐச் செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கிளைப் பொதுச்சபை கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கும் உரிமை பெற்ற முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினராகக் கருதப்படுவர்.

ஒவ்வொரு கிளைகளினதும் முழு உறுப்பினர் தகைமை பெற்ற உறுப்பினர் (வாக்காளர்) அட்டவணைகளை சங்கத் தலைமை அலுவலகத்திலும், அவ்வக்கிளைகளின் விற்பனை நிலையங்களிலும் பார்வையிடமுடியும்.

காலம் : 2002.10.06 ஞாயிற்றுக்கிழமை
கூட்ட ஆரம்பம் : முற்பகல் 10.00 மணி.

செ.கனகசபாபதி,
*கூ.அ.உ.ஆணையாளர்.*

வேலணை ப.நோ.கூ.சங்கத்தால் முறைப்படி 30.08.2002வரை தயாரித்து வழங்கப்பட்ட வாக்காளர் இடாப்பை அடிப்படையாகக்கொண்டு யாழ்ப்பாணம் கூ.அ.உ. ஆணையாளர் அவர்களால் மேற்படி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

ச.நல்லநாதன்
*தலைவர்*

வே.செல்லத்துரை
*செயலாளர்*

(8766)

## தைவான் மற்றும் நியூசிலாந்தில் நிலநடுக்கம்

தைவான் நாட்டில் 5 ரிக்டேர் அளவுள்ள நிலநடுக்கம் கடந்த புதன் கிழமை காலை ஏற்பட்டது. எனினும் இதனால் யாருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை.

1999ஆம் ஆண்டு 7.6 ரிக்டேர் அளவுள்ள கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 2ஆயிரத்து 400 பேர் இறந்தனர்; ஒரு லட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.

நியூசிலாந்தின் கிழக்குப் பகுதியிலும் 6.3 ரிக்டேர் அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

நியூசிலாந்தைச் சுற்றி ஒரு ஆண்டில் 14 ஆயிரம் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஆனால், 100 முதல் 150 நிலநடுக்கங்கள் மட்டுமே பொதுமக்கள் உணரும் வகையில் உள்ளன. (ஒ)

## மிகப்பெரிய சீக்கிய கோயில் லண்டனில்

ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய சீக்கிய கோயில் லண்டனில் ஹாவ்லொக் என்ற இடத்தில் கட்டப்பட்டு வருகிறது.

ஒரேநேரத்தில் 4 ஆயிரம் பேர் பிரார்த்தனை நடத்தும் அளவுக்கு மிகப்பெரிய மண்டபமும் இங்கு கட்டப்படுகிறது.

10 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் 254 கோடி ரூபா செலவில் இது நிறுவப்படுகிறது.

இந்தக் கோயில் திறப்புவிழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடக்கவிருக்கிறது. (ஒ)

# மேற்குக்கரை மோதல்களில் 14 மாத சிசு உட்பட 5 பேர் பலி!

## இஸ்ரேலிய அதிகாரியும் கொல்லப்பட்டார்

லண்டன்,செப்.27

மேற்குக்கரையில் உள்ள பலஸ்தீனப் பிரதேசங்களில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்வங்களில் 14 மாத பலஸ்தீனக் குழந்தை, இஸ்ரேலிய அதிகாரி உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர்.

மேற்குக் கரையின் வடபுற நகரான துல்க்ராமில் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். கப்டன் அரல் மார்மெல்ஸ்டெய்ன் என்பவரே இறந்ததாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது. இந்த மோதலில் ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த நஷத் அபுபாரா என்ற பலஸ்தீனத் தீவிரவாதியும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்குக்கரையின் தென்புற நகரான ஹெப்ரானில் இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும் பலஸ்தீனருக்கும் இடையிலான மோதலில் பிறந்து 14 மாதமேயான பெண் சிசு ஒன்று உட்பட 3பலஸ்தீனர் உயிரிழந்தனர்.

இந்த மோதல் சம்பவத்தின்போது இஸ்ரேலிய இராணுவம் சரமாரியாக கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியதாகவும் -

அவற்றில் ஒன்று பலஸ்தீன வீடொன்றுக்குள் வீழ்ந்ததால், அங்கிருந்த சிசு மூச்சுத்திணறி உயிரிழந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற உயிரிழப்புகளுடன், இரண்டு ஆண்டுகளாகத் தொடரும் மேற்காசிய கிளர்ச்சியில் இறந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 534 ஆக உயர்ந்துள்ளது. இறந்தவர்களில் ஆயிரத்து 869 பலஸ்தீனர்களும், 614 இஸ்ரேலியர்களும் அடங்குவர்.

இதற்கிடையில், கடந்த ஒருவார காலமாக பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் ரமழா நகர அலுவலகம் மீதான முற்றுகையை இஸ்ரேலிய இராணுவம் தொடர்கிறது.

அந்த வளாகத்தில் இஸ்ரேலிய இராணுவத்தால் பெரும்பாலான கட்டடங்கள் தகர்க்கப்பட்ட நிலையில், அரபாத்தின் அலுவலகம் உள்ள பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. அதற்குள் அரபாத் உட்பட சுமார் 200 பலஸ்தீனர்கள் சிக்கியுள்ளனர்.

அவர்களில் தாம் தேடும் 50 தீவிரவாதிகளும் உள்ளதாகக் கூறும் இஸ்ரேலிய இராணுவம், அந்த 50 பேரும் சரணடையும்வரை முற்றுகை தொடரும் எனத் தெரிவித்துள்ளது. (ஒ)



அரபாத்தின் அலுவலகத்தைச் சூழ்ந்துள்ள இஸ்ரேலிய டாங்கிகள்.

## 3 இந்தியர்களுக்கு மரண தண்டனை

டுபாய்,செப்.27

போதைமருந்து விற்ற 3 இந்தியர்களுக்கு டுபாய் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

இந்தியாவைச் சேர்ந்த ஹமித் மொய்தீன் (வயது 40), சுலைமான் ரஹ்மான் இப்ரஹிம் (வயது 30), செபஸ்டியன் சூரியன் (வயது 33) ஆகிய மூவரும் டுபாயில் போதை மருந்து விற்றனர். டுபாய் பொலீஸார் மே மாதம் அவர்களைக் கைதுசெய்தனர். (ஒ)

## குஜராத் தாக்குதல்: பாகிஸ்தான் மறுப்பு

இஸ்லாமாபாத்,செப்.27

இந்தியாவின் குஜராத் கோவிலில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தான் ஆதரவு பெற்றவர்கள் என்று இந்தியா குற்றஞ்சாட்டி இருந்தது. இதைப் பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் நிசார் மேன் மறுத்துள்ளார். 'இது அபாண்டானது, முன் யோசனையின்றி தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு' என்றும் அவர் கூறினார். (ஒ)

## யூத உயிர்களை காத்தவருக்கு சான்றிதழ்

இரண்டாம் உலகப் போரின்போது நாஜிக்களின் பிடியிலிருந்து நூற்றுக் கணக்கான யூதச் சிறுவர்களைக் காப்பாற்றியவர் நிக்கோலஸ் லின்டன்(வயது 93) இவருக்கு நன்றி தெரிவித்து பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயர் பாராட்டுச் சான்றிதழ் வழங்கியுள்ளார். (ஒ)

# பயணிகள் ரயில் தடம்புரண்டதில் பாகிஸ்தானில் 12பேர் மரணம்!

இஸ்லாமாபாத்,செப்.27

பாகிஸ்தானில் நேற்று ரயில் ஒன்று தடம் புரண்டதில் 12பேர் உயிரிழந்தனர்; சுமார் 60பேர் காயமடைந்தனர். மேற்குப் பாகிஸ்தானிய நகரான குவாட்டா அருகே இந்த விபத்து இடம்பெற்றது.

ராவல்பிண்டியில் இருந்து குவாட்டாவுக்குச் சென்ற விரைவு ரயில், சிபி என்ற இடத்தில் நேற்று அதிகாலை பாலம் ஒன்றின் மீது சென்று கொண்டிருந்தபோதே தடம் புரண்டது. இதில் ரயிலின் 12பெட்டிகளும் ஒன்றோடு ஒன்று மோதுண்டு கடும் சேதம் அடைந்தன.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் அடுத்தடுத்து தீவிரவாதச் சம்பவங்கள் இடம்பெற்றுவரும் இவ்வேளையில், இந்த ரயில் விபத்துக்கான காரணம் குறித்து பலவித சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

ஆயினும், விபத்துத் தொடர்பாக கருத்துக் கூறிய பாகிஸ்தானிய ரயில் சேவையின் தலைமைக் கட்டுப் பாட்டு அதிகாரி 'தற்போதைய நிலையில் விபத்துக்கான காரணத்தை கூறமுடியாது' என்று தெரிவித்தார். (ஒ)

# இந்திய ஆலயத்தில் தாக்குதல் பழிக்குப் பழி நடவடிக்கையாம்!

காந்திநகர்,செப்.27

இந்தியா மாநிலமான குஜராத்தில் இடம்பெற்ற கலவரத்துக்கு பழிவாங்கவே சுவாமி நாராயணன் கோவிலில் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாக அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கடிதங்களின்மூலம் தெரியவந்துள்ளது.

குஜராத் மாநிலம் காந்திநகரில் உள்ள சுவாமி நாராயணன் கோவிலுக்குள் 2 தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 37 பேர் இறந்தனர். அதிரடிப்படை கொமாண்டோக்கள் நேற்றுமுன்தினம் காலை அந்த 2 தீவிர வாதிகளையும் சுட்டுக்கொன்றனர். கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் சட்டைப்பையில் இருந்து உருதுமொழியில் எழுதப்பட்ட 2 கடிதங்களை அதிகாரிகள் கைப்பற்றினார்கள்.

அந்த கடிதங்களின்மூலம் அவர்கள் "தெரீக் - இ - கசாஸ் - குஜராத்" என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்தது. குஜராத் கலவரத்தில் ஏராளமான முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டதால் அதற்கு பழிவாங்குவதற்காக இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

'குஜராத்தில் நடந்த கலவரத்தின்போது பெண்கள், குழந்தைகள் மற்றும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை சகித்துக்கொள்ள முடியாது என்பதால் அவர்களுடைய ஆத்மாசாந்தியடைய, பழிவாங்கும் நடவடிக்கையாக இந்தக் கொலைத் தாக்குதலை நடத்துகிறோம்' என்று தீவிரவாதிகளிடம் இருந்து கைப்பற்றிய கடிதத்தில் எழுதப்பட்டு இருந்தது. (ஒ)

# ரஷ்ய இராணுவ ஹெலியை தீவிரவாதிகள் வீழ்த்தினர்!

## செச்சன்யாவில் சம்பவம்

மொஸ்கோ,செப்.27

செச்சினியாவில் ரஷ்ய இராணுவ ஹெலிகொப்டர் ஒன்றை தீவிரவாதிகள் சுட்டுவீழ்த்தினர். இதனை ரஷ்ய இராணுவம் ஒப்புக்கொண்டது.

செச்சின்யத் தீவிரவாதத் தளபதிகளில் ஒருவரான அப்துல் மாலிக்கின் தலைமையிலான குழுவே ஹெலியை விமான எதிர்ப்பு ஏவுகணையைப் பயன்படுத்தி தாக்கி வீழ்த்தியதாகக் கூறப்படுகிறது. கலாஷகி என்ற கிராமத்தில் ஹெலி வீழ்ந்தது. இதில், அதிலிருந்த இரு விமானிகள் உட்பட அனைவரும் உயிரிழந்தனர்.

மற்றொரு ஹெலியை நோக்கியும் தீவிரவாதிகள் ஏவுகணையை ஏவியதாகவும் -

ஆனால், அந்த ஹெலி ஏவுகணைக்கு இலக்காகாமல் தப்பி விட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்தபோது அப்பகுதியில் அரசபடைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, செச்சின்யாவிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான தீவிரவாதிகள் ஜோர்ஜியாவுக்குள் நுழைந்துவிட்டதாக ரஷ்ய இராணுவம் கூறியுள்ளது. (ஒ)

# 'டான்சி நிலத்தை ஒப்படைக்க தயார்' தமிழக நீதிமன்றத்தில் சசிகலா மனு

உலக அரங்கில்

சென்னை,செப்.27

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தோழியான சசிகலா, 'தான் செலுத்திய பணத்தைக்கூட பார்க்காமல் டான்சி நிலத்தை திருப்பி ஒப்படைக்கத் தயார்' என்று சென்னை நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

டான்சி நில வழக்கில் முதலமைச்சர் ஜெயலலிதாவையும், சசிகலாவையும், சென்னை நீதிமன்றம் விடுதலை செய்தது. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்கள் இந்திய உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வழக்குகள் தொடர்பாக சசிகலா மனு ஒன்றை கடந்த 23ஆம் திகதி தாக்கல் செய்தார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:-

"டான்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடத்தை ஜெய லலிதாவும், நானும் பங்குதாரர்களாக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு வாங்கியமை சட்டவிரோதமானது என்று மனுவை ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி தாக்கல் செய்துள்ளார்.

"டான்சி நிலம் பகிரங்க ஏலம்மூலம் வாங்கப்பட்டது. ஜெயா பப்ளிக்கேஷன் நிர்வாக பங்குதாரர் என்ற முறையில் நல்லெண்ணத்தில் அந்த நிலத்தை வாங்கினேன். இதில் சட்ட மீறல்கள் நடக்கவில்லை.

"டான்சி நிலம் விற்பனையில் முறைகேடுகள் நடந்ததாக கூறப்பட்ட குற்றச்சாட்டை மறுக்கிறோம். அதே நேரத்தில் இந்த வழக்கின் அனைத்து சூழ்நிலைகளையும் கருத்தில்கொண்டு டான்சி நிறுவனத்திடம் வாங்கிய இரு சொத்துக்களையும் நாங்கள் செலுத்திய பணத்தைகூட எதிர்பார்க்காமல் அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறேன். இந்த நிலத்துடன் வாங்கிய மற்றய சொத்துக்களையும் ஒப்படைக்கத் தயாராக உள்ளோம்.

"இதற்காக எந்தவித ஒத்துழைப்புத் தரவும் தயாராக இருக்கின்றேன். இந்த நிலப்பிரச்சினை தொடர்பாக என்ன தீர்ப்பு வந்தாலும் அதுபற்றி கவலைப்படாமல் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறேன்.

"எனவே, டான்சி நிர்வாகத்தினர் இதுபற்றி தீர்மானம் நிறைவேற்றி அந்த சொத்துக்களை திரும்ப எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்."

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

ஜெயலலிதா முன்னர் முதல்வராக இருந்தபோது அரசு நிறுவனமான டான்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடத்தை அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து மிகவும் குறைந்த விலையில் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு வாங்கியமை தொடர்பாகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. (ஒ)



பராகுவே அரசுக்கு எதிராக அந்நாட்டு விவசாயிகள் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வீதி மறியல் போராட்டம் நடத்தினர். அப்போது என்கார்னேசியன் பகுதியில் நெடுஞ்சாலையில் விவசாயிகள் தமது பண்ணை வாகனங்களை நிறுத்தி மறியல் செய்தபோது எடுத்தபடம்.

## பயங்கரவாதிகள் குறைந்துவிட்டதாக முஷாரப் பேச்சு

இஸ்லாமாபாத்,செப்.27

பாகிஸ்தானில் இப்போது பயங்கரவாதிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்று அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்திருக்கிறார்.

அல்கெய்டா, தலிபான் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்றும்-

அவர்களும் இப்போது பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில்தான் இருக்கின்றனர் என்றும் - அவர் குறிப்பிட்டார்.

பாதுகாக்கவும், எதிரி தாக்கி விடாமல் இருக்கவும்தான் அணு ஆயுதங்களைப் பாகிஸ்தான் தயாரித்து வைத்துக்கொள்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ)

## 89 வயதான மணமகள் மர்ம மரணம்!

கெய்ரோ,செப்.27

எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவைச் சேர்ந்த பெண் ஹெக்மத் ஹன்னா. இவருக்கு 89 வயது ஆகிறது. இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த 89 வயதான சக்கரியாவுக்கும் அடுத்த வாரம் திருமணம் நடைபெறவிருந்தது.

இந்த நிலையில், ஹெக்மத் ஹன்னா அவரது வீட்டில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். அவருக்கு சக்கரியா கொடுத்த பரிசுத்தொகையையும் 'மஹர்' கொலைகாரன் எடுத்துச் சென்றுவிட்டான்.

ஹெக்மத் - சக்கரியா ஆகியோர் இதற்கு முன்னர் திருமணம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

NSB



அவசரத்திற்குக் கிடைக்காத பணம்
அப்புறம் எதற்கு...

மகள் பெரியவளாகி விட்டாள். பெற்றோர் மனதில் சொல்லொன்னா சந்தோஷம். ஆனால் சந்தோஷத்தைக் கொண்டாட கையில் பணம் இல்லை. கவலையை விடுங்கள். உதவிக்கு உள்ளது "ரண் சஹன". ரண் சஹன என்பது, தேசிய சேமிப்பு வங்கியின் பொன் ஆபரணங்களுக்குப் பணம் வழங்கும் சேவையாகும்.

- ஆபரணங்களின் முழுப்பெறுமதியின் 75% வரை பணம்
- குறைந்த வட்டி
- விஞ்ஞான முறைக்கமைந்த பரிசீலனை
- துரித சேவை
- ஆபரணங்களை மீட்பது மிகவும் எளிது

ரண் சஹன சேவையை கீழே உள்ள கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்

NSB
ரண் சஹன

தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பொன் ஆபரணங்களுக்குப் பணம் வழங்கும் சேவை

பிரதான காரியாலயக் கிளை, அனுராதபுரம், அக்குரஸ்ஸ, அம்பலாங்கொடை, அளுத்கம, ஜாஎல, யாழ்ப்பாணம், நகரக் கிளை, நிக்கவரட்டிய, நீர்கொழும்பு, நிட்டம்புவ, நுவரேலியா, ருவண்வெல்ல, காலி, கம்பளை, கட்டுநாயக்க, கடவத்தை, கிரிபத்கொடை, குளியாப்பிட்டி, குருநாகல், கல்கிஸ்ஸை, கண்டி, கொள்ளுப்பிட்டி 2வது கிளை, கேகாலை, கொச்சிக்கடை, வத்தளை, வெள்ளவத்தை, வென்னப்புவ, வெலிமடை, பாலியகொடை, பதுளை, பம்பலப்பிட்டி, பிலியந்தலை, பருத்தித்துறை, புறக்கோட்டை, பண்டாரவளை, பொரல்ல, பேருவளை, தம்புள்ளை, திருகோணமலை, தெஹிவளை, நுகேகொட, மஹாபாகே, மாத்தளை, மாத்தறை, ஹலாவத்தை, மகரகம, ஹோமகம, சுன்னாகம், சாவகச்சேரி.

Masters DDB

கல்முனை மாணவியின் வழக்கு:

# பரீட்சை விடைத்தாள்களை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

காரைதீவு,செப்.27

கல்முனை ம.'.முத் மகளிர் கல்லூரி மாணவி ருஸ்தா பர்வினின் உயர்தரப் பரீட்சை பாடங்களுக்கான விடைத்தாள்கள், அதற்குரிய தபாலுறையுடன் ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதிக்குமுன் மன்றிற்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு கல்முனை மாணவியின் அடிப்படை உரிமைமீறல் வழக்கை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு, வழக்கைப் பரிசீலித்து விசாரணைக்காக ஏற்றுக் கொண்டுள்ளது. முன்னாள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.ஆர்.எம்.பி. அமரக்கோன், தற்போதைய ஆணையாளர் நாயகம் மகிந்த விஜேசிறி, மதிப்பீட்டுக் கிளைப் பணிப்பாளர் பீரிஸ் உட்பட 17பேர் பிரிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வழக்கின் முதலாவது விசாரணை நவம்பர் மாதம் 25ஆம் திகதி நடைபெறும். 10 லட்ச ரூபா நஷ்டஈடு கோரியே இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஐ)

# பெற்றோரைத் தேடிய சிறுவன் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்.செப்.27

தனது பெற்றோரை தவறவிட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இளைஞர்கள் சிலரால் யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சிறுவன் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டான்.

இதனையடுத்து சிறுவனை எதிர்வரும் 2ஆம் திகதிவரையும் நீதிமன்ற பாதுகாப்பில் இருபாலை கானான் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார்.

புலேந்திரராசா கிருபைதாசன் (வயது 8) என்ற சிறுவனே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவனாவான். பிரஸ்தாப சிறுவன் தனது சொந்த இடம் சங்கானை என்று மன்றில் தெரிவித்ததை அடுத்து, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் சிறுவனின் பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலித்து எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்பு அந்த விவரத்தை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு யாழ். செயலக விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளருக்கு கடிதம் அனுப்பிவைக்குமாறும் நீதிவான் பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரஸ்தாப சிறுவன் நேற்றுமுன்தினம் அநாதரவான நிலையில் ஆனைக்கோட்டைப் பகுதியில் நின்றதும் - பின்னர், அப்பகுதி இளைஞர்களால் சிறுவன் யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதும் தெரிந்ததே.

(எ-10-ரி)

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூன்று நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.27

சர்வதேச கல்வியகம் பிரட்றிக் ஈபேட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் 'ஜனநாயக தொழிற்சங்கத் தலைமைத்துவம்' என்ற தலைப்பிலான மூன்று நாள் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கின் ஆரம்பநாள் நிகழ்ச்சிகள் ஞாயிறு காலை 9.30 மணிக்கு இ.த.க. சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.செ.மகாலிங்கம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பிரட்றிக் ஈபேட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிக்மென் நைற்செல், அதேமன்றத்தைச் சேர்ந்த திருமதி ஜரென் கஞ்லெற் ஆகியோர் கலந்துகொள்வர்.

இக்கருத்தரங்கில் பங்குதாரர்களாக அழைக்கப்பட்ட இ.த.ஆ. சங்கத்தின் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளதும் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் தாய்ச் சங்க, மாவட்ட மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு இக்கருத்தரங்கிற்கான இணைப்பாளரும் பொதுச்செயலாளருமான த.மாகாசிவம் அழைப்பு விடுத்துள்ளார்.

(ஐ)


## கிருஷ்ணா கல்வி நிறுவனம்

கொடிகாமம்

புலமைப்பரிசில் பரீட்சை - 2002

பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | |
|---|---|
| 1) கு.கோபிகா | 157 புள்ளிகள் |
| 2) மு.கீதாஞ்சலி | 149 புள்ளிகள் |
| 3) க.மோகனதர்ஷா | 148 புள்ளிகள் |
| 4) இ.கஸ்தூரி | 140 புள்ளிகள் |
| 5) த.ஆதவன் | 139 புள்ளிகள் |
| 6) ந.சுரேகா | 122 புள்ளிகள் |
| 7) த.சிந்துஜன் | 121 புள்ளிகள் |
| 8) ச.வைதேகி | 118 புள்ளிகள் |

இவர்களையும் வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களையும் பல்கலையும் கற்று பண்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

★ எமது நிறுவனத்தில் பயின்ற 40 வீதமான மாணவர்கள் சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

- நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

(8770)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி

செல்வி மனோகரன் காயத்ரி

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(8773)

வாழ்த்தும் நன்றியும் கூறும்:
மாமா ந.பிரகலாதன்
(கண்ணன்)


## அதிபர் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பி.ப. 2.30 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது.

கொடிகாமம் பளை ஆகிய கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு கொடிகாமம் [illegible] மகா வித்தியாலயத்திலும் சாவகச்சேரி கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் இந்தக் கூட்டம் நடைபெறும்.

பாடசாலைகளின் தொகை மதிப்புக் கடமைக்குப் பொறுப்பான ஆசிரியரையும் இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(எ-117)

## யாழ்.மாநகரசபையில் உள்ளகப் பதவி உயர்வு விண்ணப்பம் கோரல்

யாழ்.மாநகரசபையில் பணியாற்றிவரும், நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு விரைவில் உள்ளகப் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 15ஆம் திகதி மாநகர சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களில் இதுவரை உள்ளக பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்பு மாநகரசபை நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டுமென முதல்வர் செ.கந்தையன் அறிவித்துள்ளார்.

(எ-10-ரி)

## மெய்வல்லுநர் போட்டி

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி ஆலய முன்றிலில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலயக் கணக்காளர் ஓ.தேவஅருள்ராஜும் சிறப்பு விருந்தினராக தீவகவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.கமலாகரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ-73)

## விளையாட்டு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ 18 வயதுப் பிரிவு - ஞானசாரியார் கல்லூரி எதிர் தொண்டமனாறு வீர கத்தி மகாவித்தியாலயம்.

**திக்கம் மைதானத்தில்**

★ 16 வயதுப் பிரிவு - நெல்லியடி ம.மகாவித்தியாலயம் எதிர் வல்வை சிவகுரு வித்தியாலயம்.

★ 18 வயதுப் பிரிவு - வல்வை சிவகுரு வித்தியாலயம் எதிர் தொண்டமானாறு வீரகத்தி மகாவித்தியாலயம்.

(ஐ-ரி)

☆ ☆ ☆

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30மணிமுதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் மூளாய் சிவப்பிரகாசம் வித்தியாலயம்.

★ சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளில இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.விக்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ஐ-ரி-86)


ராஜா யாழ்ப்பாணம்.

அஜித், ஷாலினி, நாசர் நடித்த

அமர்க்களம்

காட்சிகள்:10.30, 2.30, 6.30

நிறைஞ்சனாஸ்
சங்கானை

அர்ஜுன், சாக்ஷி, கவுண்டமணி நடித்த

வேதம் (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)


மக்கள் வங்கியின்

# பதவிநிலை உதவியாளர் இங்கிருந்து 20 [illegible]ர் தெரிவு

யாழ்ப்பாணம் செப்.27

மக்கள் வங்கியின் [illegible]லை உதவியாளர் பயிலுநர்க[illegible] யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 20 பேரு[illegible] நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நியமனம் பெற்றவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அடுத்தமாதம் முதலாம் திகதி காலை 8மணிக்கு கொழும்பு, விஜேவர்த்தன மாவத்தையில் உள்ள மக்கள் வங்கியின் பணியாளர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

நியமனம் பெற்றோரின் பெயர் விவரம் வருமாறு:-

பி.முருகதாஸ்(கொக்குவில் மேற்கு), செல்வி எம்.சதாசிவசர்மா (மட்டுவில் வடக்கு), செல்வி எம்.எஸ். யோகேந்திரன் (கோயில் வீதி, யாழ்.), எவ்ஜென்சி (வவுனியா), செல்வி என். அருணகிரிராஜா(கொழும்பு), செல்வி இசற்.கணேஸ்வரன்(நல்லூர்), பி. [illegible]ஜா(கரணவாய் தெற்கு), செல்வி எஸ்.சிவராஜ(கொழும்பு), எஸ்.பகீரதன்(பிறவுண் வீதி, யாழ்.), எல்.ஆர். றேகாந்துரம்(மன்னார்).

செல்வி வி.ஜெயக்குமார்(சாவகச்சேரி), என்.தனேஸ்(திருநெல்வேலி வடக்கு), கே.தமயந்தி(வவுனியா), பி. சீராளன்(அரியாலை), எஸ்.கோகுலகாந் (கந்தர்மடம்).

செல்வி எம்.ஸ்ரீதரன்(கோண்டாவில் கிழக்கு), ரி.பாரதரமணா (வவுனியா), எஸ்.தர்சினி(வவுனியா), செல்வி எவ்.எக்ஸ்.ஜெயச்சந்திரா (கரணவாய் கிழக்கு), ஜே.எம்.சசிநாத் (வவுனியா).

சம்பந்தப்பட்ட 20 பேரையும் குறிப்பிட்ட தினத்தில் பணியாளர் பயிற்சிக் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு வங்கியின் பிரதேச முகாமையாளர் கேட்டுள்ளார்.

(எ-10)

'வாந்திபேதி' பரவுவதை அடுத்து

# யாழ். சுற்றுப்பயணங்களை தவிர்க்குமாறு கோரிக்கை

கொழும்பு,செப்.27

யாழ்ப்பாணத்துக்கு இந்நாள்களில் சுற்றுப் பயணம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கேட்டிருக்கிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்ட 28 பேர் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதை அடுத்தே சுகாதார அமைச்சு இவ்வாறு கேட்டிருக்கிறது. நோயாளர்களில் இருவர் உயிரிழந்திருக்கின்றனர்.

அவசியத் தேவையின் பொருட்டு யாழ்ப்பாணம் செல்ல நேர்ந்தால் உணவு உட்கொள்வதில் சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்குமாறு அமைச்சு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய புத்தளம் நபர் ஒருவரின் ஒரு குழந்தை வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

(ஐ)

# காரைநகரிலும் நேற்று உண்ணாவிரத நிகழ்வு

காரைநகர்,செப்.27

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 15ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு காரைநகர் மணக்காடு முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் நேற்று உண்ணாநோன்பு அனுஷ்டிக்கப்பட்டது.

ஆலய முன்றிலில் விஷேடமாக அமைக்கப்பட்ட மேடையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் தேசியக்கொடியை வலி.மேற்கு பிரதேச மகளிர் பொறுப்பாளர் வசந்தி ஏற்றிவைத்தார். திலீபனின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் இரண்டாம் லெப்.நந்தனின் தாயார் மலர்மாலை அணிவித்தார். ஈகச் சுடரினை மாவீரர் பேரின்பராசாவின் தாயார் ஏற்றிவைத்தார்.

காரைநகர் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த உண்ணாவிரத நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட 800இற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

(ஐ-73)


## NORLAND ANGLO ALMAMATER

வடபுல ஆங்கில கலைக்கூடம் நடத்தும்
ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்புக்கள்

SPOKEN ENGLISH CLASS WITH
ANGLO STYLE SPOKEN DEMONSTRATE AND GRAMMAR

நாளை ஆரம்பம்

பிரிவு IV,V சனி, ஞாயிறு காலை 10 மணி, மாலை 4 மணி (SLT)

Dr. V.P.SUNDARARAJA (Med. ALt)

நியூட்டன் உயர்கல்வி நிலையம்

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (8774)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் சிதம்பரம்

(உடுப்பிட்டி)

துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் சிதம்பரம் நேற்று (26.09.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதிகளின் மகளும், தி.நாகரத்தினத்தின் பாசமிகு மனைவியும், பாலசுப்பிரமணியம் (கொழும்பு), ரவீந்திரன், கலாவதி (கொழும்பு), சோல்பெரி (ஜேர்மனி), சந்திராவதி, தேஸ்வரன் (டுபாய்), ரமேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயகுமாரி, முத்துலிங்கம்(Ship), செல்வமணி, விமலாதேவி, அப்புத்துரை (இ.மி.ச., பருத்தித்துறை), நிறைஞ்சலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அரவிந், துஷ்யந், ஜெயந், தனுசா, பிறேம்நாத், கேமா, சோபனா, சுபாகரன், அஜித், நிர்மல், அபர்ணா, சதீஸ், ஆர்த்தி, சில்வியா, அலெக்ஸ், காவின், நிசாந், தினேஸ், நிரோஷ், அருண், ஜீவிதா, பவித்திரன், லோறா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணிக்கு வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(8769)

தகவல்:
மா.அப்புத்துரை
(மருமகன், இ.மி.சபை,
பருத்தித்துறை)

# பிரிட்டிஷ் தூதர் இன்று தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

யாழ்ப்பாணம்,செப்.27

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுர ஸ்ரெபன் ஈவன்ஸ் இன்று வடக்கே விஜயம் செய்கிறார். அவருடன் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் குழு ஒன்றும் வருகிறது.

சர்வதேச அபிவிருத்தித் திணைக் களத்தின் (டி.எவ்.ஐ.டி.) பணிப்பாளர் நாயகம் டாக்டர் நிகோலா பிறிவர், அந்தத் திணைக்களத்தின் இலங்கைக் கான திட்ட முகாமையாளர் பொப் லிவரிங்டன், தூதரகத்தைச் சேர்ந்த அன்றியா முலகலா, பென்னிதோப், பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் மார்க் வெல்டன், அரசியல் பிரிவின் இரண்டாவது செயலாளர் மாகிரேட் ரொங், ஊடக தொடர்பா ளர் நிலக்ஷன் சுவர்ணராஜ் ஆகியோர் அடங்கிய குழு பிரிட்டிஷ் தூதருடன் வருகின்றது.

விசேட ஹெலிக்கொப்டரில் இன்று காலை யாழ்ப்பாணம் வரும் இவர் கள் இங்கு செயற்படுத்தப்படும் திட் டங்கள் சிலவற்றைப் பார்வையிடவுள் ளனர். காலை 9.15 மணியளவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் நடை பெறும் மிதிவெடி விழிப்புணர்வு நாடக மான 'நெஞ்சுறுத்தும் கானல்' நாட கத்தை பார்வையிடுவர். இந்நாடகம் யுனிசெவ் அமைப்பின் நிதி உதவியு டன் அகதிகள் புனர்வாழ்வு கழகத் தால் மேற்கொள்ளப்பட்டுவரும் விழிப் புணர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியா கும்.

நாடகத்தைப் பார்வையிட்ட பின் னர் பிரிட்டிஷ் குழுவினர் கிளிநொச்சி செல்வர். அங்கு அரசியல்துறை நடு வப் பணியகத்தில் விடுதலைப் புலி களின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர். பின் னர் அங்கிருந்து கொழும்பு திரும்பு வர். (ஐ)

## ஒன்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைச் சாவடியில் வரவேற்கப் பட்ட இவர்களுக்கு குளிர்பானமும் மதிய போசனமும் வழங்கப்பட்டன. இராணுவத்தினர் அவர்களை வழி அனுப்பி வைத்தனர்.

இவர்களுக்கு கடந்த 24ஆம் திகதி 3 சக்கர துவிச்சக்கர வண்டிகள் வழங் கப்பட்டன. (ம)

## இந்து கலாசார அமைச்சுக்கு ரூ.10 கோடி நிதி

யாழ்ப்பாணம்,செப்.27

இந்து கலாசார அமைச்சுக்கு 10 கோடி ரூபா நிதியை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஒதுக்கியிருக்கிறார்.

நாடு முழுவதும் உள்ள இந்து ஆலயங்களைப் புனரமைப்பதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டி ருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் ஜுனைட், தமிழில் உரையாற்றுவார். விடுத லைப் புலிகள் தரப்பில் புலித்தேவன் உரை நிகழ்த்துவார் என எதிர்பார்க் கப்படுகின்றது.

இவ்வைபவம் நாளை நடைபெறு வதை முன்னிட்டு நாளை காலை 9.30 மணிக்கும் பிற்பகல் 12.30 மணிக் கும் இடைப்பட்ட நேரத்தில் ஓமந்தை சோதனைச் சாவடி போக்குவரத்து களுக்கு மூடப்பட்டிருக்கும். அன்று பிற்பகல் 12.30 மணிக்குப் பின்னர் ஓமந்தை சோதனைச்சாவடி வழமை போன்று போக்குவரத்துக்குத் திறக் கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது. (ம)

## 7பேரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட இடத்துக்கு குறிப்பிட்ட நேரத்தில் அரசுத் தரப்பு அதிகாரிகள் சென்றனர். மாலை 6.15 மணிவரை காத்திருந்தனர். ஆனால் கைதானோர் விடுவிக்கப்படுவதற்காக அங்கு கூட்டி வரப்பட வில்லை. இருட்டிவிட்டதால் அதிகாரிகள் திரும்பி விட்டனர். அனே கமாக அவர்கள் இன்று விடுவிக்கப் படுவர் - இப்படி அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம)

# நல்லூர் வீதியில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தார்.

- மாவீரர் சங்கீதாவின் தாயார் திரு மதி சிவக்கொழுந்து பரமேஸ்வரி, மாவீரர் சுக்கிளாவின் தாயார் திரு மதி கமலா பாலசுப்பிரமணியம், முன் னாள் ஆசிரியர் சச்சி, யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனக சபாபதி ஆகியோர் நினைவுச்சுடர் ஏற்றினர்.

மேஜர் நிறைஞ்சனின் தந்தை கதம் பிராசா, ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பா ளர் எஸ்.பழனிவேற்பிள்ளை, மாவீரர் களான குமாரவேல், நெருங்கிலான் இருவரினதும் தாயார் திருமதி க.சிவ னேஸ்வரி ஆகியோர் முதலில் மலர் மாலைகளை அணிவித்தனர்.

யாழ்பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம உண்ணா நோன்பைத் தொடக்கிவைத் தார்.

யாழ்.இந்துக்கல்லூரின் முன்னாள் உப அதிபர் க.சிவராமலிங்கம் தலை மையில் காலை நிகழ்வுகள் நடந்தன.

வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எஸ்.வன்னியசிங்கம், மல்லாவி மகா வித்தியாலய ஆசிரியை திருமதி கபுஸ் பராணி, பல்கலைக்கழக நுண்கலைப் பீட விரிவுரையாளர் கே.சிதம்பரநாதன் ஆகியோரின் நினைவுரைகள் இடம் பெற்றன.

10.48 மணிக்கு - திலீபன் உயிர் நீத்த நேரத்தில் நினைவு மணியோசை எழுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து போராளிகளும், பொதுமக்களும் அக வணக்கம் செலுத்தி மலரஞ்சலி செய் தனர்.

தியாகி திலீபனின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டிய மாணவர்களின் பேச்சு, கவிதை, நடனம், வில்லிசை ஆகிய நிகழ்ச்சி கள் தொடர்ந்து நடைபெற்றன.

### ஓட்டோப் பேரணி

வடபிராந்திய முச்சக்கர வண்டி சங்க ஏற்பாட்டில் 300 இற்கும் மேற் பட்ட அலங்கார ஓட்டோக்களின் பேர ணியும் நேற்று நடைபெற்றது.

பஸ்நிலையப் பகுதியிலிருந்து காலை 10 மணிக்கு புறப்பட்டு ஆஸ் பத்திரிவீதி, பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதியூடாக பேரணி நல்லூரை அடைந்தது.

பிற்பகல் 3 மணிக்கு உண்ணா நோன்பு நிறைவு வைபவம் நடை பெற்றது. முன்னாள் கிராமஅலுவலர் சி.சிவராசா, மாவீரர்களான குமாரவேல், நெடுங்கீலன் ஆகியோரின் தாயாருக்கு நீராகாரம் வழங்கினார்.

வலிகாம், தென்மராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக் கான மக்கள் நேற்றைய இந்நிகழ் வில் திரண்டுவந்து பங்கேற்றனர்.

இதேவேளை -

திலீபனின் நினைவு நிகழ்வுகளில மக்கள் கலந்துகொண்டதால் யாழ். நகரப் பகுதி உட்பட குடாநாட்டின் பல இடங்களிலும் கடைகள் மூடப்பட்டி ருந்தன.

வடமராட்சியிலும் நேற்று பரவலாக அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

பிரதான நிகழ்வு மாலுசந்தி பிள் ளையார் ஆலய முன்றலில் நடைபெற் றது. (ஐ-10-8-15-51-70-117-173-152)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில், நகரில் இருந்து சுமார் எட்டு மைல் தொலைவில் வில்கம் விகாரை சிங்களக் குடியேற்றப் பிரதேசம் உளளது.

வில்கம் விகாரையிலிருந்து வடக்கே சுமார் ஒன்றரை மைல் தூரம் தள்ளி யுள்ள காட்டுப் பகுதிக்கு ஆற்றுமண் வெட்டி எடுத்துவரச் சென்ற சமயமே இவர்களைப் புலிகள் கைது செய்த னர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மண்வெட்டி ஏற்றி வருவதற்கு அவர்கள் கொண்டு சென்ற வாகனத் தையும் புலிகள் அந்த ஏழு பேருடன் சேர்த்துக் கொண்டுபோய் விட்டனர் என்று அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இந்த ஏழு சிப்பாய்களில் ஒருவரி டம் மட்டுமே ஆயுதம் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதே சத்தை விட்டு வெளியேறி புலிக ளின் பிரதேசத்துக்குள் சென்றமையி னாலேயே இவர்களைப் புலிகள் கைது செய்தனர் என்று ஒரு தகவல் தெரி வித்தது.

ஏழு படையினரும் காணாமல் போயிருப்பது குறித்தும் அவர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டிருக் கலாம் எனச் சந்தேகிக்கப்படுவது பற்றியும் யுத்தநிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் கவனத்துக்கு இலங்கை இராணுவத் தரப்பு கொண்டு வந்தி ருக்கின்றது.

இவர்களை விடுவிக்கும் முயற்சி யாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் புலிகளின் திருகோணமலை பிராந்தியத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின் றது. (ம)

## பாதுகாப்புச் செலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 700 கோடி ரூபா அடுத்த வருடம் கிடைக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. அதேவேளை, அடுத்த வருடம் 34ஆயிரத்து 900 கோடி ரூபா கடன் வாங்குவது என்று உத்தேசிக் கப்பட்டுள்ளது.

இதுவரை வாங்கிய கடன்களுக் குரிய வட்டித் தொகை மாத்திரம் 13 ஆயிரம் கோடி ரூபா. திருப்பிச் செலுத் தப்படாமல் உள்ள கடன் தொகை 19 ஆயிரத்து 700 கோடிரூபா. அடுத்த வருடம் இந்தக் கடன் திருப்பிச் செலுத் தப்பட்டாலும் 10 ஆயிரம் கோடிரூபா இன்னமும் கடனாகவே இருக்கும்.

இந்த வருடம் நாட்டின் மொத் தத் தேசிய வருமானம் 27ஆயிரத்து 820 கோடிரூபா. அதேவேளை மொத் தச் செலவினம் 41ஆயிரத்து 360 கோடி ரூபா. இதனால் 13 ஆயிரத்து 540 கோடி ரூபா துண்டுவிழும் தொகையாக இருக்கும்.

அடுத்த வருட மதிப்பீட்டில் சில இதர நிதி ஒதுக்கீடுகள் வருமாறு:-

மானியங்களும் மாற்றுக் கொடுப் பனவுகளும் - 11ஆயிரத்து 665கோடி ரூபா. இதில் 3,350 கோடி ரூபா ஓய்வூ திய நிதி, ஊனமுற்ற படையினருக்கு 340 கோடிரூபா, பாடசாலை மாணவர் களுக்கான உணவு 4கோடி 50 லட்சம், பாடசாலை சீருடை - 60 கோடி ரூபா சமுர்த்தி - 900 கோடிரூபா உர மானியங்கள் - 200 கோடிரூபா உள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கு - 230 கோடிரூபா என்பனவாகும்.

இந்த விவரங்களைப் பிரதி அமைச் சர், அமைச்சரவை கூட்டத்தில்வாசித்த போது "இவற்றை எதிலிருந்து பார்த்து வாசிக்கிறீர்?" என்று ஜனாதிபதி கேட்டாராம். அதற்கு பிரதிஅமைச்சர் "நான் வீட்டில் தயாரித்த மதிப்பீட்டின் சாராம்சத்தையே இங்கு படிக்கிறேன்." - என்று பதிலளித்தார். (ஐ)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
மின்காந்தத்தூண்டல்
By : M.கருணாநிதி
B.Sc.(Spl.)
SAT, SUN
பிரிவு I 3.00 - 4.00
பிரவு II 5.00 - 6.00
ஆரம்பம்
28-09-2002
(8750)

எமது புதிய வீடியோ CD
வெளியீடு
விஜயசாந்தி, சுமன் நடித்த
ஜோதி
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
ITN பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(C/23934)

எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு
★ நம்ம வீட்டு கல்யாணம்
வீடியோ CD 250/=
வீடியோ பிரதி 225/=
ஒரிஜினல் CD
★ மாறன்
★ கிங்
அல்டி எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம். (C/23982)

CHEMISTRY CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்.
இரவு நேர வகுப்புகள்
நேர்கோடு
Tue., Fri. - 7.15 - 8.15 p.m.
துரித மீட்டல் வினா விடை
Wed. 6.15 - 8.00 p.m.
By : பிரதீபன்
பிரயோக உயிரியல்
Tue., Fri. 7.15. - 8.15 p.m.
துரித மீட்டல் வினா விடை
Wed. 6.15 - 8.00 p.m.
By : தற்பரன்
ORGANIC
Tue., Fri. 6.15 - 7.15 p.m.
வளங்கள்
ஆரம்பம் 29.09.02
Sun 7.30 - 8.30 p.m.
By : அன்பழகன்
Light
ஆரம்பம் 28.09.02
Sat., Sun. 6.30 - 7.30 p.m.
By : கருணாநிதி
Heat Sun. 5.30 - 6.30 p.m.
By : சிவலிங்கம்
(8775)

இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்
இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சைமூலம் ஆஸ்துமா, உடற்பருமன், சலரோகம், முகப்பரு, இளநரை, தலைமுடி கொட்டு தல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்து எந்த வித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.
ஆண்மைக்குறைவு, குழந்தைப்பேறின்மை போன்ற பிரச்சினை களுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
Dr.R.K.நவனீதன் DYNS:Smp.Nc.
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல.54, மணிக்கூட்டு வீதி,
யாழ்.உல்லாசப் பயணியர் விடுதி.
(வெலிங்டன் சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.
முந்துங்கள்! முகாம் முடிவுற மூன்று தினங்களே உள்ளன.
(8736)
மருத்துவமுகாம் நடைபெறும் நாள்கள்:
செப்ரெம்பர் 24, 25, 26, 27, 28, 29 திகதிகளில்

எமது நேற்றைய V.C.D
வெளியீடு
முரளி, விவேக், வடிவேலுவின்
நம்ம வீட்டு கல்யாணம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

கணக்கீடு
A/L 2003 DAY
பங்குடைமை
குறைமாதக் கணக்கு
ஆரம்பம் நாளை 9.00 a.m.
A/L 2004
தொங்கல் கணக்கு
ஆரம்பம் நாளை 7.30 a.m.
A/L Day Class
ஆரம்ப அலகிலிருந்து துரித மீட்டல்
செவ்வாய் 1.30 p.m.
ஆசிரியர் : S.தவா
B.Com.(Hons) [Acc.Spl.]
NIRU TUITION CENTRE
KONDAVIL
(8772)

ஞானோதயா அக்கடமி
சாவகச்சேரி
A/L 2003
சடமும் கதிர்ப்பும்
Sat., Sun. 12.00 - 1.00
A/L 2004
அலைகளும் அதிர்வுகளும்
Sat., Sun. 11.00 - 12.00
ஆரம்பம்: 28.09.2002
By: M.கருணாநிதி
B.Sc. (Spl.) (8751)

கிராம உத்தியோகத்தர் (G.S.)
பதவிக்கான பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்பு
ஆரம்பம்: 28.09.2002
சனிக்கிழமை மாலை 3.00 மணி
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ். (8717)

IPAS
Institute of Professional Accounting Studies
Chartered Accountancy CIMA(U.K)
aat CMA
28.09.2002 அன்று 9.30 மணிக்கு மேற்படி அனைத்து Professional கற்கைநெறிகளுக் குமான விரிவுரைகள் ஆரம்பம்.
Audit Training ஆன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
Further details : IPAS
199, Main Street, Jaffna.
Office Hours :
Sat & Sun 9.00a.m. - 5.00p.m.
(C/23979)

உடன் தேவை
மேசன் வேலைக்கு ஆள்கள் தேவை.
தகுதியுடையோர் உடன் நேரில் வரவும்.
தொடர்பு : பாலன் ஹாட்வெயர்ஸ்
256, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டிச் சந்தி, (மக்கள் வங்கி முன்பாக),
யாழ்ப்பாணம்.
(8758)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.